உ

கணபதிதுணை.

வித்யாபாநு.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."—(திருக்குறள்)

தொகுதி—௧௧. Vol. XI.	சித்தார்த்தி-வரு வைகாசி, ஆனிமீ JUNE. JULY. 1919.	பகுதி ௫-௬. No. 5—6.

ஸ்ரீ

கல்கத்தா யூனிவர்சிடி கமிஷன் ரிபோர்ட்டு.

சிபார்சுகளின் சாராம்சம்.

கல்கத்தா யூனிவர்சிடி கமிஷன் ரிபோர்ட்டு இன்று வெளியா யிருக்கிறது. இதில், சர்வ கலாசாலைகளின் முறைகளைக் கண்டித்தும், இந்தச்சர்வ கலாசாலைகள் ஏற்பட்டதற்குக் காரணங்களை விவரித்தும் கூறப்பட்டிருக்கின்றன. இந்த ரிபோர்ட்டு ஐந்து புத்தகங்களாக வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த ரிபோர்ட்டுகளின் சாராம்சம் வருமாறு:—

1813-ம் வருஷத்தில் இந்தியா கவர்ன்மென்ட் டைரெக்டர்கள் இந்தியாவின் கல்வி அபிவிருத்திக்காக வருஷந்தோறும் ஒரு லக்ஷம் ரூபாய் செலவழிக்க முற்பட்டனர். 1835-ம் வருஷத்தில் கவர்ன் மெண்டார் மதசம்பந்தமாக நடுவு நிலைமையாயிருப்பதென்று தீர்மா னித்துவிட்டு, இந்தியா கவர்ன்மெண்டுக்கு அகப்படும் பணத்தையெல் லாம் மேனாட்டுக்கல்வியைப் பரப்புவதற்கென்று உபயோகித்தனர். 1854-ம் வருஷத்தில் கவர்ன்மெண்டின் கல்வி முறைகள் ஒருவாறு சீர்திருத்தப்பட்டன. அப்பொழுதே சில சர்வகலாசாலைகளும் ஸ்தா பிக்கப்பட்டன. பிறகு 1882-ம் வருஷத்தில் சில பள்ளிக்கூடங்க ளுக்கும் காலேஜுகளுக்கும் கொடுக்கப்பட்டிருந்த ஆதரவானது நீக் கப்பட்டது. இன்னனம் கவர்ன்மெண்டார் தம் ஆதரவை நீக்கிவிட் டது பெருந்தவறாகும்; 1904-ம் வருஷத்தில் யூனிவர்சிடி சட்டம் அமுலுக்குக்கொண்டுவரப்பட்டது.

வங்காளத்தில் ஸ்கூல் விஷயம்.—தற்காலத்திய கல்விமுறை குறைகூறப்படுவதற்கு நான்கு காரணங்கள் உள. அவை வருமாறு:—

1. அநேகமாக எல்லா இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களும் சரி வசதியுடன் இல்லை. குறைந்த சம்பளமுள்ள உபாத்தியாயர்களும் பயிற்சி செய்யப்படாத உபாத்தியாயர்களும் பல பள்ளிக்கூடங்களில் இருக்கிறார்கள்.

2. உயர்தரப்பள்ளிக்கூடங்களில் பரீக்ஷைகள் என்ற தீங்குகள் இருக்கின்றன. இந்தப்பரீக்ஷைகள் முறைதவறினவாயிருக்கின்றன. தேச க்ஷேமத்திற்காகவும் மாணவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு உபயோகமாகும்படியும் மாணவர்களுக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை.

3. யூனிவர்சிடிக்கும் கல்வி இலாகாவுக்கும் ஒற்றுமையில்லாமையால் பள்ளிக்கூடங்களை மேற்பார்வை செய்யப்போதிய உத்தியோகஸ்தர்கள் இல்லை.

4. சகண்டரிப் பள்ளிக்கூடத்தின் பாடங்கள் அநேகமாய்க் காலேஜுகளிலேயே போதிக்கப்படுகின்றன. எந்த நோக்கத்துடன் படிப்புச்சொல்லிக்கொடுக்கப்படுகின்றதோ அந்த நோக்கம் நிறைவேறுவதில்லை.

சித்திரக்கலாசாலைகள்.—சித்திரக்கலாசாலைகள் சம்பந்தமாக உள்ள குறைகள் வருமாறு:—

(அ) ஒரு யூனிவர்சிடியின் பார்வைக்கு உட்படாத பல விஷயங்கள் இந்தப் பாகத்தில் அடங்கிக்கிடக்கின்றன.

(ஆ) சித்திரக்கலைகளிலும் சாஸ்திரங்களிலும் கீழ்த்தரப்படிப்பானது காலேஜுகளில் கற்பிக்கப்பட்டுவருகின்றது. இந்தக் காலேஜுகளுக்குச் சிப்பந்திகள் போதுமானவைகளாயில்லை. இந்தப்பள்ளிக்கூடங்களிலுள்ள உபாத்தியாயர்கள் பலர், பள்ளிப்பிள்ளைகளின் சம்பளத்தையே பொருந்து நிற்கின்றார்கள். கல்கத்தாவில் பல சித்திரக்கலாசாலைகள் இருந்தபோதிலும் ஆங்கு ஒற்றுமை இல்லை.

(இ) இந்தக்காலேஜுகளில் கற்றுக்கொடுக்கப்படும் கல்வியானது பல துறைகளுக்கு உபயோகப்படக்கூடியதாயில்லை. டெகனிகல் விஷயங்களில் போதுமான பயிற்சி கொடுக்கத்தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. பொதுவான உபந்நியாசங்கள் செய்யப்படுகின்றனவேயன்றி, ஒரு தனி மனிதனுடைய பிற்கால வாழ்க்கைக்கு உபயோகமாகும்படியான கல்வி கற்றுக்கொடுக்கப்படுவதில்லை.

(டி) இந்தக் காலேஜுகளிலுள்ள பல உபாத்தியாயர்களுக்குக் குறைந்த சம்பளமே கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த உபாத்தியாயர்களிற் பலர் கௌரவமான நிலையில் வர முடிவதில்லை.

(இ) எம். ஏ. எம். சி. முதலிய பரீக்ஷைகளை யூனிவர்சிடியார் தங்கள் ஆதிக்கத்தில் வைத்துக்கொண்டதால் பல வேற்றுமைகள் உண்டாயின.

(எப்) வெளியூர்களிலுள்ள பள்ளிக்கூடங்களில் கொடுக்கப்படும் கல்வியானது யூனிவர்சிடி கல்வி என்று சொல்லமுடியாது. முக்கியமாக வெளியூர்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கும் யூனிவர்சிடிக்கும் எவ்விதமான சம்பந்தமும் இருப்பதில்லை.

பிறகு ரிபோர்ட்டின் இரண்டாவது அதிகாரத்தில் ஸ்திரீகளின் கல்வியைப்பற்றியும் ஜனசார விஷயமாகப் பள்ளிக்கூடங்களில் எவ்வளவு விருத்தி செய்யவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

டக்கா சர்வகலாசாலை.

டக்கா சர்வ கலாசாலை அமைப்பைப்பற்றிக் கல்விக் கமிஷன் அறிக்கை கூறுவதாவது:—

சர்வகலாசாலை, அதிகாரிகளின் நேரான மேற்பார்வையில் நடத்தப்படவேண்டும். கல்விச்சாலைக்குத் தேவையான எல்லாப்பாடங்களும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படவேண்டும்,

முக்கியமான உத்தியோகஸ்தர்கள்:—ராஜப்பிரதிநிதி பார்வையிடுபவர், வங்காளக்கவர்னர் சர்வகலாசாலை சான்ஸலர், முழு அவகாசத்தையும் செலவழிக்கும் ஒருவருக்கு மாதச்சம்பளம் கொடுத்து உதவி சான்ஸலராக நியமிக்கவேண்டும். உத்தியோகஸ்தர்களையும், உத்தியோகஸ்தரல்லாதாரையும் கொண்ட ஒரு பிரதிநிதித்துவச் சபை இச்சபையினருக்குச் சர்வகலாசாலை விஷயமான தேவையான சட்டங்களைச்செய்ய அதிகாரமும் பணவிஷயத்தைக் கவனிக்கும் அதிகாரமும் வேண்டும். பணவிஷயமாய் மேற்பார்வை பார்க்க ஒரு நிர்வாக சபை ஏற்படுத்தப்படவேண்டும். கல்வி விஷயமாகவும் பாடப்

புத்தகங்களை வைக்கும் விஷயமாகவும் கவனிக்க ஒரு சபை வேண்டும். இச்சபையில் உபாத்தியாயர்கள் அங்கத்தினராக விருத்தல் வேண்டும்.

கவர்ன்மெண்டார் வருடா வருடம் சர்வகலாசாலைக்குப் பண உதவி செய்தல் வேண்டும்.

சர்வகலாசாலை அதிகாரிகளுக்குப்பணம் செலவழிக்கவும், பொது ஜனங்களிடமிருந்து உதவி பெறவும் அதிகாரம் வேண்டும்.

உபாத்தியாயர்கள் சர்வகலாசாலை அதிகாரிகளால் நியமிக்கப்பட வேண்டும். இங்கிலாந்திலுள்ள செலக்டு கமிட்டியாரால் தெரிந்தெடுக்கப்படுபவர்களும் உபாத்தியாயர்களாக நியமிக்கப்படுவார்கள். சில முக்கியமான உத்தியோகஸ்தர்கள் வங்காளக் கவர்ன்மெண்டாரால் உதவி சான்ஸலருடன் யோசித்து நியமிக்கப்படுவார்கள்.

சர்வகலாசாலையாரால் எல்லா மாணவர்களும், கல்லூரி ஹாஸ்டலில் வசிக்கும்படி கட்டாயப்படுத்தப்படமாட்டார்கள். அதிக மாணவர்கள் கல்லூரியிலேயே தான் வசிக்க வேண்டும். மாணவர்களுக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுக்கப்படவேண்டும்.

முகமதியர்களின் நன்மைக்காக முகமதியர்களின் நூல்களும் கற்பிக்கப்படவேண்டும். எல்லாச்சபைகளிலும் முகமதியப் பிரதிநிதிகள் இருத்தல்வேண்டும். முகமதிய யோசனைப் போர்டும் ஏற்படுத்தப்படவேண்டும்.

கல்கத்தா சர்வகலாசாலை.—டெக்கா சர்வகலாசாலையில் அநுஷ்டிக்கப்படும் முறை கல்கத்தாவிலும் அநுஷ்டிக்கப்படல் முடியாது. அம்மாகாணம் அதிக விருத்தி அடைந்திருக்கிறது. அவ்விடத்திற்கு ஏற்றவாறு கல்விமுறை அநுஷ்டிக்கப்படவேண்டும்.

(b) எவ்விதப்பரீக்ஷை செய்யப்படலாமென்பதையும், எப்படிப்பிறதுறைகளில் அபேட்சகர்களைச் சேர்த்துக்கொள்ளலாமென்பதையும் கருதும் யோசனையைப் பின்னர் நிர்ணயித்துக்கொள்ளும் நோக்குடன் 2 செகண்டரி பரீக்ஷைகள் நடத்தல், (c) கல்விச்சாலைகளை அங்கீ

கரித்துப் பின்னர்ப்பரீட்சைக்குத் தகுதியுள்ளவர்களை அனுப்பல், தக்க படிப்புப்போதித்தல் இவ்விஷயத்தை நிர்ணயித்தல், d) போதனுமுறைகளைப் பிரேரேபித்து வேண்டிய தொகையைச் செலவிடும் விதத்தை எடுத்துக்காட்டியும், மெஜாரட்டியார் யோசனைப்படிவேண்டிய அதிகார பரிசோதனைகளைச் செய்வித்தும், பொதுப்பணத்தால் ஆதரிக்கப்பட்டுவரும் கல்லூரிகளை மேற்பார்த்து வருதல் இவைகளாகும்.

(g) அக்கிராசனருடன் கூடிய இச்சபை கல்வியிலாகா டைரெக்டர் வேலைக்கு இணங்கிய காரியங்களைச்செய்து வருவது மன்றி, கல்வி விருத்தியைக் கவனிக்கும் காரியத்தைப்பார்த்து வருவார்கள். இவர்களுகையால் கல்வி டைரெக்டர் வேலை மாற்றம் பெற்று அவர்யோசனை செய்யும் அதிகாரியாக இருந்து பொது வேலையைப் பார்த்துவருவார்கள். டைரெக்டரை கவர்ன்மெண்டு காரியதரிசிகளில் ஒருவராக ஏற்கும்படி கமிஷனர்கள் சிபார்சு செய்கின்றார்கள்.

சர்வகலாசாலைச் சீர்திருத்தம்.

தற்காலக்குறையை நீக்க அதிக சர்வகலாசாலை ஏற்படவேண்டுமென்றும் அவைகள் தக்க போதனு முறைகளைக்கொண்டு நடத்தப்படவேண்டுமென்றும் டெக்காவிலும் பிற முக்கிய விடங்களிலும் சில நூதன சர்வகலாசாலைகள் ஏற்படவேண்டுமென்றும் கமிஷனர்கள் சிபார்சு செய்திருக்கிறார்கள்.

1. தற்காலம் கல்கத்தா சர்வகலாசாலையில் கவர்னர் ஜெனரலுக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் ஏற்பட்டுள்ள அதிகாரம் எடுக்கப்படல்வேண்டும். இராஜப்பிரதிநிதி சட்டசபையார் கலாசாலைச் சட்டங்களை ஏற்படுத்தும் அதிகாரத்தைப் பெறவேண்டும்.

2. வங்காள மாகாண கவர்னர் அம்மாகாண சர்வகலாசாலைகட்கு சான்ஸலராயிருக்கவேண்டும்.

3. வங்காள சர்வகலாசாலை விஷயத்தில் இந்தியா கவர்ன்மெண்டு பொறுப்பை வங்காள கவர்ன்மெண்டார் எடுத்துக்கொள்ள வேண்டும்.

4. சர்வகலாசாலை விதிகளை இம்பீரியல் சட்டசபையார் அமைத்துவிட்டால் அதன் திருத்தவிஷயத்தைச் சர்வகலாசாலைச்சபையினர் வங்காளக்கவர்னருடன் கலந்து யோசித்து நடத்துவார்கள். சான்ஸலருக்கு எந்தச் சட்டத்தையும் நிராகரிக்கும் உரிமையுண்டு.

5. கௌரவப்பட்ட பரீக்ஷை தக்கவர்களுக்கு ஏற்படவேண்டும். அதற்குத் தக்கபாடங்கள் ஏற்படல் வேண்டும்.

6. இண்டர்மீடியட்டிற்குப்பின் 3 வருஷத்துக்குக் கௌரவப்பட்ட பரீக்ஷைக்காகப் பயின்று பின்னர் ஒரு வருஷம் சென்றதும் எம். ஏ. பட்டம் எடுத்துக்கொள்ள அநுமதி கொடுக்கப்படவேண்டும்.

7. போதகாசிரியர் பட்டங்கள் கலாசாலையால் அங்கீகரிக்கப்படவேண்டும். அவர்கள் குறைந்த சம்பளமும் வரையறுக்கப்படும்.

8. போதகாசிரியர்கள், உபந்யாசிகள் முதலியோர் அந்தந்தச் சர்வகலாசாலைச் செலெக்ட் கமிட்டியால் நியமிக்கப்படும்.

9. எந்தெந்த வகுப்பிற்கு எத்தகைய போதகாசிரியர்களை நியமிப்பதென்பதும், அவர்களைப் பரீக்ஷிக்கவும், சிறு ஸிவில் சர்விஸ் கமிஷன் ஏற்படவேண்டும்.

10. மாணவர்களின் தேகப்பயிற்சி, ஆரோக்யம் இவைகளைக் கருதிப் பிரதி கலாசாலைக்கும் ஒரு தேகப்பயிற்சிப்போதகர் ஏற்படவேண்டும். அதில் வைத்ய பரிசோதகர் இருக்கவேண்டும்.

11. மகம்மதியக் கல்வி குறைந்திருப்பதால் அதற்கெனப் பிரத்தியேக வசதிகள் ஏற்படவேண்டும்.

அதற்குப்பின் தற்கால மாணவர் வாழ்க்கையின் தன்மையைப் பற்றி ஓர் அதிகாரம் எழுதப்பட்டிருக்கிறது. முக்கியமாக, கல்கத்தாவிலுள்ள மாணவர்கள் வாழ்க்கையின் கஷ்டங்களும் பிறவும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. சர்வகலாசாலை இருப்பிடத்தைப்பற்றிய ஓர் அதிகாரத்துடன் இது முடிகிறது.

பயிற்சி,—பலவகைப்பயிற்சிக்குரிய உபாத்தியாயர்களுக்குரிய பயிற்சியைப்பற்றி இதில் விவரமாகக் கூறப்பட்டிருக்கிறது. சட்டக்

கல்வியும் வைத்தியக்கல்வியும் தவிர மற்றக்கல்விகளுக்காகத் தற்காலம் உள்ள வசதிகள் முற்றிலும் குறைவானவையென்பதை விளக்குகிறது.

நிர்வாக விஷயங்கள்.—இதில் நிர்வாக விஷயங்கள் பேசப்பட்டிருக்கின்றன. சர்வகலாசாலை நிர்வாக ஊழல்கள் இதில் நன்கு விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஸினேட் அமைப்பும் கண்டிக்கப்பட்டிருக்கிறது. அதில் பிரதிநிதிகள் போதுமான அளவில்லை. இன்னும் அதிகப்படுத்தவேண்டும். அரசாங்க நிர்வாகமும் கண்டிக்கப்படுகிறது. அரசாங்கத்துக்கும் சர்வகலாசங்கத்துக்குமுள்ள சம்பந்தம் சரியாயில்லையென்ற விஷயமும் குறிப்பிடப்படுகிறது. சர்வகலாசங்கத்தும் காலேஜிகளுக்குமுள்ள சம்பந்தமுங்குறிப்பிடப்படுகிறது. உத்தியோகங்களுக்குச் சர்வகலாசங்கப் பட்டங்களையே ஒரே தகுதியாகக் கருதப்படும் விஷயமும் கண்டிக்கப்பட்டிருக்கிறது, சிறு குமாஸ்தாப் பதவிக்கும் அவ்விஷயம் கவனிக்கப்படுகிறது. ஆதலால் அந்த முறை கண்டிக்கப்படுகிறது. இந்தியச் சர்வகலாசாலைகளுக்கும் மற்ற நாட்டிலுள்ள சர்வகலாசாலைக்கும் இருக்கும் வித்தியாசமும் எடுத்துக் காட்டப்படுகிறது.

நாலு ஐந்தாவது பகுதிகளில் கமிஷன் கூறும் திருத்தங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்குரிய நியாயங்களும் கூறப்பட்டிருக்கின்றன. அந்தயோசனை காரியத்தில் நிறைவேறிப்பயன் பெற மிகவும் நீண்டகாலம் செல்லும் அதற்கு ஏராளமான பொருளும் வேண்டும்.

சிபார்சுகள்.

இரண்டாம் தரக்கல்வி.—இரண்டாந்தரக் கல்வி முறையை வக்காலத்தில் திருத்தி அமைத்தாலன்றிச் சர்வகலாசாலை முறையைச் சரியாகத் திருத்தியமைக்கமுடியாது. அவர்கள் சிபார்சுகள்:—

1. இண்டர்மீடியட்படியில் உள்ளவர்தான் சர்வகலாசாலையிற் சேரவேண்டும்.

2. இண்டர்மீடியட்படியில் பயிற்று கடமை யூனிவர்சிட்டியிலிருந்து இண்டர்மீடியட் கல்லூரிகளுக்கு மாற்றப்படவேண்டும். ஜில்லாக்கள்தோறும் ஒவ்வொரு கல்லூரியிலாவது ஏற்படவேண்டும்.

3. இண்டர்மீடியட் கல்லூரிகளும் மற்றக் கல்லூரிகளும் வேறாக இருக்கவேண்டும்.

4. இரு பரீக்ஷைகள் இருக்கவேண்டும்.

5. கல்வியிலாகா திருத்தியமைக்கப்படவேண்டும்.

6. சக்கண்டரி, இண்டர்மீடியட் கல்வி சம்பந்தமான சங்கத்தில் உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்களே அதிகமாகயிருக்கவேண்டும். அவர்கள் விவரம் கூறப்படுகிறது.

7. அச்சங்கத்தின் அதிகாரம் கூறப்பட்டிருக்கிறது.

(d) காலேஜ் உபாத்தியாயர்களை வேலைக்குப் பழக்கவும் அவர்களுக்குப்பணம் கொடுக்கவும்.

(e) காலேஜில் வேலைசெய்யும் உபாத்தியாயர்களின் கௌரவத்தை அங்கீகாரம் செய்யவும்வேண்டும்: இதற்காகக்காலேஜ் உபாத்தியாயர்கள் தங்கள் பெயர் முதலியவற்றைத் பதிவுசெய்துகொள்ளவேண்டும். அவர்கள் கௌரவம் உபாத்தியாயத்தொழிலுக்கு அருகமான தல்லவென்று சின்டிகேட்டாரால் நினைக்கப்பட்டு அவர்கள் வேலைக்குச்செல்லலாம். அவ்வாறான உபாத்தியாயர்களின் தொகை அவர்கள் நியமிக்கப்பட்டிருக்கும் காலேஜில் வேலைசெய்து வருபவர்களின் தொகையில் நான்கில் ஒரு பங்காகுமாயின் அந்தக்காலேஜ் யூனிவர்ஸிடியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.

6. புதிதாக ஏற்பாடாகும் முறையில் ஒரு காலேஜின் கடமைகள் பின்வருமாறு இருக்கவேண்டும்:—

அண்டர் கிராஜிவேட், போஸ்டுகிராஜ்வேட், முதலியவர்களுக்குப் போதித்தாலும் அவர்கள் எந்தக் கல்வியைக்கற்கவேண்டுமென்று எடுத்துக்காட்டவும்.

அவர்கள் எவராவது யூனிவர்சிடி பிரசங்கங்களைப்போய்க் கேட்கலாமா என்றும், ஒவ்வொரு ஷைபனும் தன்னுடைய முயற்சியால் தன்பாடங்களைப் படித்துவர ஏற்பாடு முதலியவை செய்தும், பரீக்ஷைக்குச் செல்லுமுன் அப்பையன் மேற்கூறியவாறு எல்லாப் பிரி

வகளிலும் படித்திருக்கிருனென் றுகூற ஒரு யோக்கியதாபத்திரமும் அவன் கல்வியின் எந்தப்பாகத்தைச் சொல்லிக்கொள்ள உத்தேசித் திருக்கின்றுனே அந்தப்பாகத்தில் கற்றுக்கொடுக்கும் தன்மையை யடைந்திருக்கிறு ரென்றும், பையன்களுடைய வாசஸ்தலம், தேக சௌகரியம், நடமைக்கு இப்படித்து நடக்கின்றன என்றும் சோதிக்கவும் காலேஜ்களுக்குச் சுதந்தரமிருக்கவேண்டும். அவை கள் உபாத்தியாயர்களை நியமிக்க முக்கியமாகச் சுதந்தரம் பெற்றி ருக்கவேண்டும். அப்படி நியமிக்கப்படும் உபாத்தியாயர்கள் மூன்று விதமாக இருக்கலாம். யூனிவர்சிடியாரால் நியமிக்கப்பட்ட உபாத் தியாயர்கள்; இவர்களுடைய பிரசங்கங்கள் அந்த யூனிவர்சிடியைச் சேர்ந்த மாணவர் யாவரும் கேட்கலாம். இவர்கள் யூனிவர்சிடியி லின்றும் சிறிது சம்பளம் பெறுவர்.

2, யூனிவர்சிடியாரால் கௌரவம் அங்கீகரிக்கப்பட்ட உபாத் தியாயர்கள் இவர்களது பிரசங்கம் அந்தக் காலேஜுக்கு மட்டும்.

3. அங்கீகாரம் பெருத உபாத்தியாயர் ஒரு சிலரே யிருப்பார் கள்.

7. முக்கியமாய் மாகாணக் கல்லூரியை நடத்துவதற்குவேண் டிய செலவினைக்கொடுத்துக் கலாசாலையினர் உதவிசெய்யவேண்டும். அக்கல்லூரி திருத்தி அமைக்கப்படவேண்டும். வருஷாந்தரத் தொகை சில கல்லூரியின் அபிவிருத்திக்கு நிர்வாக சபையாரிடம் கொடுக்கப்படவேண்டும். பத்துக் காலேஜ் உபாத்தியாயர்களும் சில மேல்நாட்டுப் போதகாசிரியர்களுமிருக்கவேண்டும். இங்கிலாந்தி லுள்ள பிரத்தியேகக் கமிட்டியாரால் அப்போதகாசிரியர் நியமிக்கப் படவேண்டும்.

8. சில்லரை உபாத்தியாயரை சான்ஸலரே நியமித்துக்கொள் ளலாம். கல்லூரித்தலைவர்கள் போதகாசிரியர்களை நியமித்தாலும் கூட அவர்கள் அங்கீகாரம் சர்வகலாசாலையைப் பொறுத்ததாகும்.

9. கல்லூரி விதிகளின்படி வேண்டிய உதவியைப்பெற்று மாணவர்களுக்கு இடவசதி வேண்டியிருந்தால் அவற்றையும் செய்

யக் கல்லூரித்தலைவர்கள் பாத்தியப்படவேண்டும். ஆதலால் கல்லூரிகளுக்கு அவற்றைத் தக்கபடி அமைத்துக்கொள்ள அங்கீகாரம் பெறுவதற்கு முன் ஐந்துவருஷ காலம் கொடுக்கப்படும்.

10 அரபி, பெர்ஸியன், இஸ்லாமிய சரித்திரம் இவைகளைப் போதிக்கும் ஒரு இஸ்லாமியக் காலேஜூம் வடமொழிக் கல்விக்கு இலக்காக ஒரு வைதீக இந்து கல்லூரியும் ஏற்படவேண்டும்.

11. ஒவ்வொரு கல்லூரியும் மூன்று வருடத்திற்கு ஒருதரம் பரிசோதனை செய்யப்படவேண்டும்.

12. அரசாங்க உதவியைவேண்டும் கல்லூரிகள் அதிகாரச்சபையின் சிபார்சுடன் கவர்ன்மெண்டுக்கு மனுச்செய்துகொள்ளவேண்டும்.

13. கல்கத்தாவிலுள்ள பல கல்லூரிகளின் ஒற்றுமையை உத்தேசித்துக் கல்கத்தா சர்வகலாசாலையைப் பக்கத்துக் கிராமங்களுக்கு மாற்றுமல் அங்கரிலேயே வைத்திருக்கவேண்டுமென்றும் கல்லூரிப்போதகர்களும் நிர்வாகர்களும் கலந்து உறவாடச்செய்யும்படி ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்றும் ஆடல் வெளியும் இருப்புவசதியும் அமைக்கப்பக்கத்துக் கிராமங்களில் கட்டடம் அமைக்கப்படவேண்டுமென்றும் கமிஷன் சபையார் கேட்டுக்கொள்ளவேண்டும்.

14. மகமதியக் கல்வியின் நலத்தைக்கருதி மகமதியப்பிரதிநிதிகள் சர்வகலாசாலையிலும் மற்ற சபைகளிலும் ஏற்படல் வேண்டும். மகமதியர் விஷயத்தில் ஆலோசனை கேட்க ஒரு முஸ்லீம் சபையும் நியமிக்கப்படவேண்டும்.

15. கல்லூரித்தலைவர்கட்கும் உபாத்தியாயர்களுக்கும் உத்தியோக விஷயத்தில் ஏதேனும் அபிப்பிராய பேதம் உண்டாகுமாயின் அதைச் சர்வகலாசாலையினர் டிரிபுனலில் விசாரணைசெய்து முடிவு கூறுவார்கள்.

16. எந்த உபாத்தியாயருக்குக் கல்லூரியில் நீதி கிடைக்கவில்லையோ அவர்கள் சான்ஸலருக்கு மனுச் செய்துகொள்ளலாம்.

வெளியூர்க் கல்லூரிகள்.

மாகாணத்துள் வெளியிடங்களிலுள்ள கல்லூரிகளைப் பலவிதத்திலும் ஆதரிக்கவேண்டும்.

1. வெளியூர்க் கல்லூரிகள் சர்வகலாசாலையால் அங்கீகரிக்கப்பட்டதாயினும் பிரத்தியேக சபையின் விசாரணையிலிருக்க வேண்டும்.

2. பிரத்தியேக கலாசாலைகள் தனிச் சர்வ கலாசாலையைப் போல் ஏற்படக்கூடிய திறமையுடையதாக விருந்து வருமாயின் அவைகளுக்காகத் தனி ஏற்பாடுசெய்து பிரத்தியேகப் பரிக்ஷைகள் பட்டங்கள் அளிக்க ஏற்பாடு செய்யப்படலாம்.

3. சர்வகலாசாலைக்கு வேண்டிய அதிகச்செலவுத் தொகை சர்வகலாசாலை அதிகார சபையாரின் கோரிக்கையின் மேல் கவர்ன்மெண்டால் கொடுக்கப்படும்.

அரசாங்க ஊழியம்.

கல்வி முறை திருத்தம் பெறச் சர்வகலாசாலை விதிகள் திருத்தம் பெறவேண்டும். போதகாசிரியர் ஊழிய நிபந்தனை விஷயம் எடுக்கப்படவேண்டும்.

(1) செகண்டரி உயர்தரப் போதகாசிரியர்கள் சபையாரால் பயிற்றுவிக்கப்படவேண்டும். சபையார் உசிதப்படி உபாத்தியாயர்களை மாற்றலாம். ஆனால் அவர்கள் சம்பளம் அதிகாரம் இவ்விஷயங்கள் போர்டாரால் கவனித்து முடிவு செய்யப்படும்.

2. மேல்காட்டினின்று பென்ஷன் பெறக்கூடிய போதகாசிரியர்கள் அரசாங்கத்தாரால் எடுத்துக் கல்லூரிகளில் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கு வருமான திட்டங்கள் கிடையா இவர்கள் கவர்ன்மெண்டு கல்லூரியிலதானிருக்க வேண்டுமென்ற நிபந்தனையில்லை. (3) இனி காலேஜ் நியமனங்கள் அதன் நிர்வாக சபையாரால் செய்யப்படும். அதற்கென அச்சபையில் செலெக்ஷன் கமிட்டி

ஏற்படுத்தி அதில் நியமனம், மேல்நாட்டுப் போதகாசிரியரை வரவழைக்கும் விஷயம், சம்பளம்போன்ற விஷயத்தில் அரசாங்கத்தார் பிரசர்கள் முதலியன கவனிக்கப்படல்வேண்டும்.

உத்தியோக, சாஸ்திரக் கல்வி.

இண்டர்மிடியேட் காலேஜ்களில் விவசாயம், வியாபாரம் போதனுமுறை, வைத்திய விஷயம், எஞ்சினியரிங் இவைகள் கற்பிக்கப் பிரத்தியேக ஏற்பாடு செய்யப்படுவதல்லாமல் இவைகளுக்குப் போதகாசிரியர்கள் செகண்டரி ஹையர்கிரேடில் வருஷம் 700 பேர் பழக்குவிக்கப்படுவார்கள். அவ்வப்படிப்புகட்கும் பிரத்தியேகக் கல்லூரிகள் ஏற்படுத்தி, பிறகு அவ்வவைகட்குத் தக்க போதனு விதிகள் அமைத்துக் கொடுக்கப்படவேண்டும்.

பெண் கல்வி.

பெண்கல்வி விஷயம் பிரத்தியேகமாகக் கருதப்படும். அதற்கென இக்கமிஷன் சபையார் ஒரு செகண்டரி போர்டு, ஒரு இண்டர்மீடியட் போர்டு இரண்டும் ஏற்படுத்துவார்கள். சொற்ப ஸ்திரீகளே படிக்கின்றமையால் காலேஜ் டிக்கிரிகள் அவர்களுக்குப் பிரத்தியேகமாக ஏற்படுத்தப்படமாட்டாது.

சிவாஜியின் குரு ராமதாஸ்.

1. வசன நூல் மூலமாகவும், வேறு பல விதங்களாலும், விஷயங்களைப் பொதஜன அபிவிருத்தியின் பொருட்டும், தேச சமூக முன்னேற்றத்தின்பொருட்டும் வெளியிடுவது தற்காலத்துக்குரிய கடமையாம். இங்ஙனம் வெளியிடும் விஷயங்களின் தன்மை வெவ்வேறாயிருக்கின்றது. சில, வியாசரூபமாகவும், கதை ரூபமாகவும், வெளியிடப்படுகின்றன. அவைகளில் ஜீவிய சரித்திர மூலமாய் ஜனங்களுக்கு சத்விஷயத்தைப் போதிப்பதும் ஒன்று. இவ்வித ஜீவிய சரித்திரங்களைப் படிப்பதில் நமக்கு அநேகம்நன்மைகளுண்டு.

ஆகவே, மஹாராஜ ஸ்ரீ ராமதாஸின் சரித்திரமும் அதனைப்படிப்போருக்கு நன்மை பயக்கும் என்னும் எண்ணத்துடன் எனக்கெய்தும் ஓய்வு நேரங்களில் அவரது ஜீவிய சரித்திரத்தை ஆங்கிலத்தில் எழுதியிருக்கும் ஓர் வியாசத்திலிருந்து மொழிபெயர்த்துக் கொஞ்சம் கொஞ்சமாய் வெளியிட உத்தேசித்திருக்கிறேன். அதனைத் தமிழகம் அங்கீகரிக்கும், என்ற முழு நம்பிக்கையுடன் எழுதப்புகுகின்றனன்.

2. பதினாறாவது நூற்றாண்டின் பிற்பகுதியிலும், பதினேழாவது நூற்றாண்டின் முற்பகுதியிலும், மொகலாய ராஜ்யம், தென்னிந்தியா முழுதும் பரவி டில்லி சக்ரவர்த்திகளுக்குட்பட்ட ப்ரதிநிதிகளால் ஆளப்பட்டு வந்தது. மஹாராஷ்டிரத்தை ஆண்டுவந்த ராஜப்ரதிநிதிகளோ, தாங்கள் சக்ரவர்த்திக்கு எட்டாத தூரத்திலிருப்பதாலும் மிக்க பிடிவாதமும் வீரத்தனமும் வாய்ந்த மராட்டியரை அடக்கியாள நியமிக்கப்பட்டிருப்பதாலும், தங்கள் மனம் போனபடி சட்டங்களை ஏற்படுத்தி ஜனங்களைக் கஷ்டப்படுத்திவந்தார்கள். அவர்கள் கொடுக்கச் சக்தியற்ற வரிகளை ஏற்படுத்திக் கொடுங்கோல் செலுத்தினர். மகம்மதிய மதத்தைத் தென்னிந்தியா முழுதும் பரவச்செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் ஹிந்துக்களுடைய மதத்தையும் இதிஹாச புராணங்களையும் இழிவாய்ப்பேசி அவர்கள் கோவில், குளம் முதலியவைகளை இடித்துத் தகர்த்து நாசமாக்கினார்கள். மகம்மதிய மதத்தைக் கைக்கொள்ளாதவர்களைச் சொல்லொணாக் கஷ்டங்களுக்கு உட்படுத்தினர்.

3. இத்தகைய அரசாட்சியைப் பொறுக்கமாட்டாமல் ஜனங்கள் டில்லிச் சக்ரவர்த்திக்குத் தங்களுக்குள்ள முறையினைத் தீர்க்கும்படி அடிக்கடி மனுச்செய்து கொண்டார்கள். எனினும் ஒன்றும் பயன்படவில்லை. டில்லிச் சக்ரவர்த்திக்கும் தங்களது ராஜப்ரதிநிதிகளுக்கும் மனுச்செய்வதால் தங்களுடைய குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளமுடியாதென்றுணர்ந்தனர். ஆகவே, சிலர் தேச கைங்கர்யத்தின்பொருட்டும் மஹாராஷ்டிர ஜனங்களின் நன்மையின்பொருட்டும், தங்களது வாழ்வை அர்ப்பணம் செய்து, கிராமம் கிராமமாய்ச்

சென்று ப்ரஜைகளுக்கு மதாபிமானம், தேசாபிமானம், வர்ணாச்ரம தர்மம், சனாதன தர்மம் இவைகளைப்பற்றி உபந்நியசித்து நல்லறிவை, ஊட்டி வந்தார்கள். அவர்களில் பெரும்பாலார் சந்நியாசிகள். துகாராம், ஏகநாத், மொரயதேவா ஜயராம சுவாமி, ராமதாஸ் என்பவர்கள் ஒருவர் பின் ஒருவராய் வந்து ஹிந்து தர்மத்தைப்பற்றி ஜனங்களுக்கு அறிவூட்டிவந்தமைபற்றி, மஹாராஷ்டிர ராஜ்யம் சிவாஜி மஹாராஜாவின் குடைக்கீழ் மேன்மையையும், கீர்த்தியையும் அடைந்திருந்தது.

4. ராமதாஸ் என்பவர் 1607-ல் தோக்கர் எனும் பிராமண குலத்தில், சதாரா ஜில்லாவில் கோதாவரி நதிக்கரையிலுள்ள ஜம்பவா எனும் கிராமத்தில் பிறந்தார். இவர் தந்தை சூர்யாஜிபந்த். மிக்க தெய்வபக்தியும் உதாரகுணமுமுடைய சீலர். ஓர் விசேஷ தினத்தன்று சூர்யாஜிபந்த் அவரது பாரியையான, ராணுபாய் எனும்மாது சிரோன்மணியுடன், யக்ஞம் செய்துகொண்டிருக்குங்காலை, ஓர் அந்தணர் ஆங்கெழுந்தருளி, அன்னாரை ஆசீர்வதித்து, ராணுபாய் இரு ஆண் மகவை அடைவள் என்று, திருவாய்மலர்ந்தருளியெழ, காலக்ரமத்தில் ராணுபாயும் இரு ஆண் மகவை ஈன்றனள். அவ்விருவரில் ராமதாஸ் இளையவர். இவருக்குப் பெற்றோர் நாராயணன் என, நாமகரணஞ்செய்தனர். இவரது ஐந்தாவது வயதில் உபநயனம் நடந்தது. அது முதல் வேதோக்தமாக வித்யாரம்பமும் ஆயிற்று. அவர் மிக்க தீக்ஷிண்ய புத்தியும், சாதுர்யமும், சொல்வதை எளிதில் க்ரஹித்துக்கொள்ளும் தன்மையும், உள்ளவர். ஆகவே, வெகு சீக்கிரத்தில் வேதங்களைக்கற்று அதிநிபுணரானார். இதைக்கேட்ட ராணுபாயும், "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக்கேட்டதாய்" எனும் ஆன்றோர் வாக்கிற்கேற்ப, அளவில் ஆனந்தம் எய்தினள்.

5. இவசது சிறுவயதில் இவரது தந்தையிறக்கவே, இவருடைய வித்தைக்கும் குந்தகம் ஏற்பட்டதுமன்றி, குடும்பவிசாரணையும் இவரைச்சார்ந்தது. அங்ஙனமிருப்பினும், நாராயணன் தனக்கெய்திய ஒய்வு நேரங்களை வீணாக்காது, கோதாவரி தீரத்தில் நிழலையும், குளிர்ந்த காற்றையும், மனதுக்கு உத்ஸாகத்தையும் கொடுக்கக்கூடிய தோப்புக்களிற்சென்று, ஆங்குச் சாவதானமாய்த் தான் கற்ற விஷயங்களைத் தீரவிசாரித்துத் தன் சந்தேகங்களைப் பிறருடைய உதவியின்றி நிவர்த்திசெய்துகொள்வார்,

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
யருமையும் பாரா ரவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்"

எனும் ஆன்றோர்வாக்கிற்கிசைய இவர் ஊண் உறக்கமின்றித் தன் காரியத்தின் மேலே கருத்துள்ளவராயிருந்தார்.

6. இவர் இங்ஙனம் வீட்டைவிட்டு அடிக்கடி வெளிப்போந்து, தன் தாய்க்கும் தமையனுக்கும் விசாரத்தை உண்டுபண்ணி வந்தார். அவர்களும் நாராயணனை வீட்டிலேயிருக்கும்படிசெய்யத் தங்களா லியன்ற அளவுமுயன்றும் பயன்படவில்லை. ஓர் நாள் இவர் பஞ்சவடியில் சிந்தித்துக்கொண்டிருந்தமையால் வீட்டிற்குத் திரும்பிப் போகவேணுமென்கிற எண்ணமில்லாமலிருந்தார். இவரை நெடு நேரம் காணாமல் இவரது தாய் தமையனர் இருவரும் இவரைத் தேடப்புறப்பட்டுப் பஞ்சவடி முழுதும் தேடிக்களைப்படைந்து வீட்டிற்குத் திரும்பிப்போகையில் ஓர் மரத்தடியில் நாராயணன் சமாதியிலிருப்பதைப் பார்த்தார்கள். பிறகு அநேகவிதமான சமாதானங்கள் சொல்லி வீட்டிற்கழைத்துச்சென்றார்கள்.

7. இக்காலத்திற்றான் மொகலாயர் தென்னிந்தியா முழுதும் பரவி, சிரேஷ்டமான கோவில்களையும் அரிய பல கட்டிடங்களையும் இடித்து நாசமாக்கி, ஒரு பாவமுமறியாத ஆடவர் பெண்டிர் பாலர் முதலிய எல்லோரையும் யாதொரு பச்சாத்தாபமுமின்றித் தங்களது வாளுக்கிரையாக்கித் தங்களது மதத்தையும் கொடுங்கோன்மையையும் ஸ்தாபித்துவந்தார்கள். இவைகளையெல்லாம்கேட்ட நாராயணன் யாது செய்வதென்றுணராமல் மனோசஞ்சலப்பட்டுக்கொண்டிருந்தார். தனது தாய் நாடானது நாகரீகமற்ற மூர்க்கஜாதிகளால் கொள்ளையடிக்கப்படுவதையும், நாசமாக்கப்படுவதையும், ஜனங்கள் கொல்லப்படுவதையும், மற்றும் தாய்ப்பூமி அனுபவிக்கும் பல துன்பங்களையும் பார்க்கப் பார்க்க அவரது மனம் அனலிலிட்டமெழுகென உருகியது. ஆகவே, இவ்விதமான கஷ்டங்களையெல்லாம் அறவே ஒழித்துத் தனது, தேசத்தை மொகலாயர் கொடுமையினின்றும் விடுவித்து அதற்கு நன்மையையும் புகழையும் உண்டாக்கி, ஸநாதனதர்மத்தை, ஸ்தாபிக்கவேண்டுமென்ற ஆவல் அவரை அடிமை கொண்டது.

8. இவர் கருத்தை நிறைவேற்றுவதென்றால் சாமானிய மனிதர்களால் முடியாதென்றே சொல்லலாம். இவர் தன் கருத்துக்களை

நிறைவேற்றவேண்டின் அவர் தமது வாழ்நாள் முழுமையும் அதற்கென்றே செலவிட்டாலொழிய, அக்கருத்துக்கள் நிறைவேறா. மேலும், தேச கைங்கர்யத்தைத் தவிர வேறொன்றிலும் தனது மனதைப் போகவொட்டாமலிருக்கவும் வேண்டும். தனது தேசத்தின் நன்மையைத் தேடவேண்டின் இவர் எவ்விதமான கஷ்டங்களையும் பாராட்டாமல் தான் மேற்கொண்ட காரியமே பெரிதென்றெண்ணி, மனத்தளர்ச்சியில்லாமல் ஊக்கத்துடன் உழைக்கவேண்டும். இவைகளையெல்லாம் ஒருவன் க்ருஹஸ்தனாயிருந்துகொண்டு செய்வது அசாத்தியமென்று எண்ணித் தன் கருத்துக்களை நிறைவேற்றுவதற்குத் தகுந்தது சந்நியாசியாச்ரமம் என்று தீர்மானித்துத் தான் சந்நியாசியாச்ரமம் அடைவதாயும் தீர்மானித்துவிட்டார்.

9. இவரது தமையனார் இவரைச் சந்தித்தபொழுது நாராயணன் தனதெண்ணத்தை வெளியிட்டு அவருக்கு அதன் காரணத்தையும் பின்வருமாறு சொன்னார்:—

"நமது தேசத்தை முன்னுக்குக் கொண்டுவருவதற்காகவும், மொகலாயர் கொடுமையை ஒழிப்பதற்காகவும், உன்னதமான ப்ரம்ம மதத்தை ஸ்தாபிப்பதற்காகவும் நான் வெளியூர்களுக்குச் சென்று ஜனங்களுக்கு மதாபிமானத்தை உண்டுபண்ணி அதன் மூலமாகத் தேசாபிமானம், ஒற்றுமை, சகோதரத்வம் இவைகளைப் போதிக்க வேண்டியவனாயிருக்கிறேன். நான் அதற்காக என் வாழ்நாள் முழுதும் தேச கைங்கர்யத்தில் செலவிட உத்தேசித்திருக்கிறேன். இவைகளைச் செய்யக் க்ருஹஸ்தாச்ரமம் ஏற்றதல்லதாதலின், சந்யாசி ஆச்ரமத்தைக் கைக்கொள்ளத் தீர்மானித்திருக்கிறேன். தங்களுடைய கருணைபொருந்திய உத்தரவை எதிர்பார்க்கிறேன்".

10. இதைக்கேட்ட அவர் சகோதரர் அவ்விடத்தில் அவ்விஷயத்தைப்பற்றித் தர்க்கிப்பதில் பயனில்லையென்றெண்ணி, அச்சமயத்தில் நாராயணனது திர்மானத்தை அங்கீகரித்தப் பின், தங்களது உற்றார் உறவினர்களைக்கொண்டு நாராயணன் தீர்மானத்தை மாற்றவேண்டுமென்று எண்ணங்கொண்டிருந்தார்.

(தொடரும்)

S. R. வெங்கட்ராமனார்.

(௧௰௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

ரூபாய் அனுப்புவதென்று தீர்மானித்திருக்கிறோம். இவ்வளவுதான், நான் உனக்குச் சொல்லவேண்டியது.''

மதிமான்—''உன் கட்டளைப்படி நான் நடக்கமாட்டேனென்றால் நீ என்ன செய்வாய்?''

சுலக்ஷணை—'நீ மறுத்தால் அரசாங்கத்தின் உத்தரவை மீறினவனாகிறாய். அதனால் விளையுங்கேடு உனக்குத் தெரியும். நான் சொல்லுகிறபடி நீ நடக்கமாட்டேனென்றால், உன் கார்டியன்கள் உனக்குச் செலவிற்கு ஒரு பைசாகூடக் கொடுக்கமாட்டார்கள். அவர்கள் தராவிட்டாலென்ன. நான் கடன் வாங்கிக்கொள்ளுகிறேன்' என்று நீ சொல்லலாம். நாங்கள் சமாசாரப் பத்திரிகைகளில் வயது வராத உனக்கு ஒருவரும் கடன் கொடுக்கக்கூடாது என்று விளம்பரம் செய்துவிடுவோம்.''

மதிமான்—''அம்மா, நீ சொல்லவேண்டியது இன்னும் ஏதாவது பாக்கியிருக்கிறதா?'' என்று அலக்ஷியமாய்க் கேட்டான்.

''ஒன்றுமில்லை,'' என்று சொல்லிவிட்டு அறையிலிருந்து வெளியே போவதற்காக எழுந்திருந்தாள்.

மதிமான்—''அம்மா நில், நான் கொஞ்சம் பேசவேண்டும், அதைக்கேட்டுவிட்டுப் போகலாம். முதலாவதாக நான் இந்த ஊரை விட்டு அசையமாட்டேன். ஆகையால் நீ ஜமீந்தார் நமச்சிவாயத்தினிடம் சொல்லி அவன் எனக்காகச் சம்பாதித்த உத்தியோகத்தை வேண்டாமென்று மறுத்துவிடும்படி செய். இரண்டாவதாக எனக்குப் பணம் தாராமல் நிறுத்துவதற்குப் பதிலாய், இப்பொழுது மாதாந்தரம் கொடுக்கும் தொகையை இரட்டித்துக் கொடுக்கும்படி என் கார்டியன்களிடம் சொல். அப்பொழுது நான் கடன் வாங்கவேண்டிய தேவையுமிராது. நீ சமாசாரப் பத்திரிகைகளில் விளம்பரஞ்

செய்யவேண்டிய அவசியமுமேற்படாது. மூன்றாவதாகக் கடன் கொடுத்தவர்களினால் ஏற்படும் தொந்தரவு நீங்கும்படி எனக்கு இப்பொழுது இருக்கும் கடன்களையெல்லாம் பணம் கொடுத்துத் தீர்த்து விடு."

சுலக்ஷணா அறையின் மத்தியில் நின்று கொண்டிருந்தாள். ஒரு வேளை மதிமானுக்குத் தன்னுடைய மனதிலிருந்த அனேக இரகசியங்களில் ஏதாவதொன்று தெரிந்துவிட்டதோ என்று அவள் சந்தேகப்பட்டாள். அப்படித் தெரிந்திருந்தால் எதுவாயிருக்கலாம். அவனுக்கும் சூடாமணிக்கும் அதிக சினேகம் உண்டு என்று அவளுக்குத் தெரியுமாதலால், மாறுவேஷத்தைப்பற்றியும் சண்டையைப்பற்றியும் சூடாமணி சொல்லியிருப்பானென்று நினைத்தாள்.

அவள் தன் மனதிலுண்டான குழப்பத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டு சொல்லுகிறாள், "மதிமானே நீ எந்த வலுவால் உன் தாயையும், கார்டியன்களையும், அரசனையுங்கூட எதிர்த்துநிற்கிறாய்?"

மதிமான்—உனக்குத் தெரியவேண்டுமானால் சொல்லுகிறேன் கேள். உன்னுடைய வேலைத்தனங்களெல்லாம் எனக்குத் தெரியாமற் போய்விட்டன, என்று எண்ணாதே. நான் ஒரு பெயரைச் சொல்லுகிறேன். அந்தப்பெயர் உன்னைப்பற்றி எனக்கு எவ்வளவு தெரியுமென்பதைக் காட்டுவதுமல்லாமல், உன்னால் என்னை அடக்கமுடியாது என்பதையும் காட்டும்."

சுலக்ஷணா—" அந்தப்பெயர் என்ன?"

மதிமான் தன் தாயின் முகத்தைப்பார்த்துப் பரிகாசமாய்ச் சிரித்துவிட்டுச் சொல்லுகிறான், " சூடாமணி "

கோபப்பார்வையுடன் சுலக்ஷணா சொல்லுகிறாள், " நீ சொல்வது எனக்கு விளங்குகிறது. அன்று நடந்த சண்டையால் அந்த வாலிபனுடைய புத்தி மாறிவிட்டது."

மதிமான்—" அந்தச் சண்டைக்கு மூலகாரணமாயிருந்தவள் என் பிரியமாகிய தாயாகிய நீயல்லவா?"

உக்கிரமான கோபத்துடன் சுலக்ஷணு சொல்லுகிருள், "இவ்வளவு தாழ்ந்த அவதூறை நீ மறுபடியும் மனந்துணிந்து சொல்லுவாயா ?"

மதிமான்—"அவதூறு ? அது உண்மைதான். நான் அதை ருஜூப்படுத்துவேன்."

"நீ ருஜூப்படுத்துவாயா ?" என்று அவள் கேட்டாள். அவளுடைய நேர்த்தியான கண்கள் மதிமானைக் கூர்ந்து நோக்கின.

மதிமான்—"ஆம், மாறுவேஷம் போட்டுக்கொண்டிருந்த ஸ்திரீ நீதானென்றும், சூடாமணிக்கு முதலிற் கடிதம் எழுதினதும் பிறகு சிந்தாமணி என்ற பெயரை மாத்திரம் எழுதியனுப்பியதும் நீதானென்றும் என்னல் ருஜூப்படுத்தமுடியும்."

சுலக்ஷணு—"மதிமானே, நீ உன் தாய் உறுதியாய்ச்சொல்வது பொய்யென்றும், அந்த உபயோகமற்ற வாலிபன் சொல்வது நிஜமென்றும் நம்புகிருயா ?"

மதிமான்—"ஆனுல் அந்த உடுப்பைப்பற்றிய சமாசாரமென்ன?"

சுலக்ஷணு—"உடுப்பா ? எனக்கு விளங்கவில்லையே."

மதிமான்—"உனக்குச் சீக்கிரத்தில் விளங்கும்படி செய்கிறேன். நான் வெள்ளிப்பாத்திரங்களிருந்த பெட்டியைத்திறந்து அதனடியிலிருந்த அழகான மாறுவேஷ உடையை எடுத்துவிட்டேன் என்பது உனக்குத் தெரியட்டும்."

சுலக்ஷணு—"மோசக்காரப்பயலே! என்னையே கடிப்பதற்காகவா சர்ப்பமாகிய உன்னை நான் பாலூற்றி வளர்த்தேன் ? நீ இந்தக் காரியத்தைச் செய்திருந்தால் நான் பழி வாங்குவேன். அது மிகவும் கொடியதாயிருக்கும். நீ கனவிலும் நினையாதவண்ணம் நான் உன்னைத் தண்டிப்பேன். ஆனுல் சீக்கிரமாய்ச் சொல்லு. சூடாமணிக்கு இதைத் தெரிவித்துவிட்டாயா ?"

மதிமான்—"அவனுக்குத் தெரிவித்தேனு 'என்று கேட்கிருய்? நிச்சயமாய்த் தெரிவித்துவிட்டேன். நீயும் என் கார்டியன்களும்

சேர்ந்து நேற்றுச் சதியாலோசனை செய்துகொண்டிருக்கும்பொழுது மாறுவேஷ உடையைத் தேடச்சொல்லி என்னைத் தூண்டியவன் சூடாமணிதானே."

சுலக்ஷணு—"அப்படியானால் மதிமானே, நீ என்ன செய்திருக்கிறாய் என்பது உனக்குத் தெரிகிறதா? நீ உன் தாயின் கற்பைக்காலியாய்த் திரிகிற அந்த வாலிபன் வசத்தில் ஒப்படைத்துவிட்டாய். நீ என்னைச் சூடாமணியின் இஷ்டப்படி நடக்கவேண்டியவளாக்கிவிட்டாய்."

தன் தாயைப்பார்த்துக் கொஞ்சமும் இரக்கமில்லாமல் மதிமான் சொல்லுகிறான், "அப்படியானால் நீ ஏன் உன்னை அப்படிப்பட்ட நிலைமைக்கு வரும்படி செய்துகொண்டாய். ஏனம்மா, காலியாகவும், மிதமிஞ்சிச் செலவழிப்பவனாகவும், இஷ்டப்படி திரிபவனாகவும் இருக்கிறதாகச்சொல்லி நீ என்னை அடிக்கடி கோபித்துக்கொண்டாயே. நீ என்னைவிடக் காலியாயிருக்கிறாயே. நான் இங்கேயிருப்பதனால் கெட்டுப்போகிறேன் என்று சொல்லி என்னை வெளியூருக்கு அனுப்பமுயற்சி செய்தாய். ஆனால் நீ கெட்டுப்போகாதபடி நீயே முதலில் தூரதேசத்திற்கு அனுப்பப்படவேண்டும். இருந்தபோதிலும், உன்னுடன் சச்சரவு செய்யவேண்டுமென்பது என் கருத்தல்ல. ஆகையால் நாமிருவரும் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளுவோம். நீ என்னிஷ்டப்படி நடக்கவேண்டும். நான் உன் இரகசியத்தை வெளியிடவில்லை. சூடாமணியினிடத்தில் நீ பயப்படவேண்டியதில்லை. உன் மகனாகிய என்னிடத்தில் இந்த விஷயத்தைச் சொன்னது உனக்குப் போதுமான தண்டனை என்று அவன் சொன்னான். ஆகையால் இத்தச்சங்கதி வேறெங்கும் பரவாமல் அடங்கிவிடும். நான் சற்றுமுன் சொல்லிய இரண்டு மூன்று காரியங்களை நீ நிறைவேற்றவேண்டும்."

சுலக்ஷணு பேசாமல் மதிமானைக் கவனித்துக்கொண்டே இருந்தாள். அவளுடைய முகத்தில் உண்டான குறிகளால் அவள் மனதில் பலவ நுத்தமான எண்ணங்கள் உண்டாகிக்கொண்டிருந்தன என்பது தெளிவாய் விளங்கிற்று. அவள் ஏதோ ஒன்றைச் சொல்லவும்

செய்யவும் ஆவலுள்ளவளாகக் காணப்பட்டாள். ஆனல் அதைச் சொல்லவும் செய்யவும் அவள் மனம் துணியவில்லை. அவள் தன் மகனை அளவில்லாப்பகையோடு பார்த்தாள். தாழ்ந்த குரலுடன் சுலக்ஷணு சொல்லுகிறள், "நீ இவ்வளவெல்லாம் செய்தாயா? நன்றியறிதல், அன்பு மரியாதை ஆகிய இத்தியாதி குணங்கள் கிஞ்சித்தும் உன்னிடத்திலில்லை. நீ உன் தாய்க்கு அவமானத்தையும், அவமரியாதையையும், வெட்கத்தையும் உண்டுபண்ணியிருக்கிறய். உன் தாயைச்சூடாமணியின் அதிகாரத்துக்கு அடக்கிநடக்கும்படி செய்துவிட்டாய். இவ்வளவு தூரம் செய்த பிறகுகூட உன் மனமானது இளகவில்லை. மதிமானே உன்னை நான் மனப்பூர்வமாய்ப் பகைக்கிறேன்."

மதிமான்—அலக்ஷியமாய்ப் பதிற்சொல்லுகிறன், "நீ உன் மனதில் உள்ளதை ஒளியாமற் சொல்லுகிறதில் எனக்குச் சந்தோஷந்தான். நானும் எவ்வளவோ சொல்லுவேன். ஆனல் அதனற் பிரயோசனமில்லை. ஆகையால் நாம் இந்த விஷயத்தை ஒருவிதமாய்த் தீர்த்துக்கொள்ளவேண்டும். ஜமீந்தார் நமச்சிவாயத்தினிடம் சொல்லி உத்தியோகத்தை மறுத்துவிடும்படி செய். நான் என்னுடைய நடத்தையைச் சீர்திருத்திக் கொள்வதாய் உறுதி சொன்னதாகவும், நீ அதை நம்புவதாகவும் லேக்ஷ்மணய்யரிடம் சொல்லு. என்னுடைய கடன்களைத் தீர்த்துவிட்டு, எனக்குச் செலவிற்கு வேண்டிய பணத்தையும் கொடுத்து என்னிஷ்டப்படி திரியுமாறு விட்டுவிடு. நான் உன் இரகசியத்தை வெளிவிடவில்லை."

"நான் மறுத்தாலென்ன செய்வாய்?" என்று சுலக்ஷணு கேட்டாள்.

மதிமான்—"நீ யப்படி மறுப்பாயானல், நான் முதல் முதலில் என்னுடைய சகோதரிகளிடம் அவர்களுக்கு எப்பேர்ப்பட்ட தாய் வாய்த்திருக்கிறள் என்பதைச்சொல்லுவேன்."

சுலக்ஷணு—"போதும், போதும், எல்லாம் உன்னிஷ்டப்படி நடக்குமாறு செய்கிறேன். ஆனல் உன் சகோதரிகளுக்கு இதைப்

பற்றி ஒரு வார்த்தையாவது சொல்வாயாகில்——ஆனால் அது இடக் கட்டும் நீ போ."

மதிமான் அறையிலிருந்து வெளியே போனான். அவன் கூடா மணிக்கு வாக்களித்தபடி அன்று சாயந்திரம் அவனுடன் சாப்பிட்டான்.

சுலக்ஷணாவும் அறையைவிட்டு நீங்கினாள். மிகவும் வருத்தமான மனோநிலைமையுடன் வெள்ளிப்பாத்திரங்கள் வைத்திருந்த பெட்டியைத் திறந்து பார்த்தாள். அதிலிருந்த மாறுவேஷ உடை காணமற்போயிருப்பதைக் கண்டாள். சற்றுநேரம் வரை அங்கே தானே உட்கார்ந்திருந்தாள். அவளுடைய கண்களிலிருந்து நீர் தாரைதாரையாய் வடிந்தது. சீக்கிரத்தில் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அவள் பின்வருமாறு ஒரு கடிதம் வரைந்தாள்.

என்னன்பான ஜமீந்தார் நமச்சிவாயம்,

நான் என் மகனாகிய மதிமானைக் கண்டு பேசினேன். நேற்று நாம் யோசித்த விஷயத்தை அவனுக்குச் சொன்னேன். அவன் உடனே என்காலில் விழுந்து, தான் இதுவரை காலியாய்த் திரிந்ததாய் ஒத்துக்கொண்டு, தன்னை மன்னிக்குமாறு பிரார்த்தித்தான். என்னையும் அவனுடைய சகோதரிகளையும் விட்டுப் பிரிந்து, தூரதேசத்திற்குப்போய் அங்கே அனேக மாதங்கள் வரை இருக்கவேண்டுமென்ற எண்ணம் அவனுக்கு அதிக வருத்தத்தை உண்டு பண்ணுவதாய்ச் சொல்லுகிறான். சில மாதங்களுக்கு முன் அவன் கொஞ்ச காலத்திற்கு வெளியூருக்குப் போயிருந்தபொழுது அவனுக்கு வீட்டிலேயே ஞாபகமிருந்ததாம். அவன் எவ்வளவு குற்றம் செய்திருந்தபோதிலும் இந்த மாதிரி தண்டிக்கக்கூடாதென்று கெஞ்சுகிறான். நானும் அவனுடைய கார்டியன்களும் அவனை மன்னித்துவிட்டால், அவன் தன் நடத்தையைச் சீர்திருத்திக்கொள்ளுவதாய் உறுதி கூறுகிறான். அவன் கடன் உபத்திரவம் பொறுக்கமுடியவில்லையென்றும் சொல்லுகிறான். நான் அவனை மன்னிப்பதாக வாக்களித்தேன். நீயும் இரக்கமான மனதுடையவனாதலால் அப்படியே செய்வாயென்று நம்புகி

றேன். அவனுக்காகத் தேடிய உத்தியோகத்தை வேண்டாமென்று சொல்லிவிடவேண்டும், அவனுடைய கடன்களையும் பணம் கொடுத்துத் தீர்த்துவிடவேண்டும்.

இப்படிக்கு,

சுலக்ஷணா.

சுலக்ஷணா இந்தக் கடிதத்தை மடித்து மேல்விலாசம் எழுதி ஜமீந்தார் நமச்சிவாயத்திற்கு ஒரு ஆள்வசம் அனுப்பினாள்.

முதற்பாகம் முற்றிற்று.

வ. வி. நடேசன்செட்டி,
ஆத்தங்குடி

மாககாவ்யம் அல்லது சிசுபாலவதம்.

(முதற்பகுதி ௨௰௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏனென்றால் காலதேச வர்த்தமானத்தையறிந்த ராஜன் பராக்ரமத்தையும், சாந்தத்தையும் ஒரே இடத்திற் காட்டக்கூடாது. ரஸங்களையறிந்த கவி கடினமாகவும், ஸுலபமாகவும் ஒரே விஷயத்தை எழுதுகிறானா? இல்லை. ஆனால் ‘அடிக்கடி குற்றஞ்செய்தவனை யார்தான் பொறுத்துக்கொள்வார்கள்’ என்று பலராமன் சொன்னது ஸரியல்ல. ஏனென்றால், ஜ்வரமானது அபத்யஞ்செய்யப்பட்ட காலத்திற் சரீரத்திற்குள்ளேயே பரவிக்கொண்டு, பிறகு எப்படி எந்த மருந்தினாலும் சாந்தப்படுத்தமுடியாத பெரும் ஜ்வரமாக ஏற்படுகிறதோ, அப்படியே தன் சத்ருக்களால் அபகாரம் செய்யப்பட்டவனாயிருந்தாலும் கோபத்தை மனதிற்குள்ளேயே அடக்கிக்கொண்டு தகுந்தகாலத்தில் தான் தன்னுடைய கோபத்தைக் காட்டவேண்டும். ஆனைபோல் எப்படி விளக்கானது கடுவிலிருக்கும் திரியினால் எண்ணெயைக் க்ரஹிக்கிறதோ அப்படியே ராஜும் பொறுமை என்பதை முதலில் வைத்துக்கொண்டு கார்யத்தைச் சாதிக்கவேண்டும். இப்படிச்செய்தாற்றான் கார்யமும் ஸித்திக்

கும். ஆனால் பொறுமையாயிருக்கவேண்டுமென்று சொன்னதால், ஒரு காரியமும் செய்யாமல் பௌருஷத்தை விட்டுவிடவேண்டுமென்று அர்த்தமல்ல. தெய்வம் விட்டபடி விடட்டும் என்ற கொள்கைமாத்திரம் அடையக்கூடாது. அல்லது நம்மாலாகாதது உண்டா என்ற கொள்கையையும் அடையக்கூடாது. எப்படி ஸத்கவியானவன் வார்த்தை அர்த்தம் ஆகிய இரண்டையும் கவனிக்கிறானோ, அப்படியே கெட்டிக்காரனாயிருப்பவன் மேற்சொல்லப்பட்ட இரண்டு கொள்கைகளையும் அடைந்து காலத்தையும் காரியத்தையும் அனுசரித்துப் போகவேண்டுமேயல்லாது எல்லாம் தெய்வச் செயல் என்றே எப்பொழுதும் இருக்கக்கூடாது; அல்லது நம்மாலாகாதது உண்டா என்றே எப்பொழுதும் இருக்கக்கூடாது. பொறுமையினால் உண்டாகும் பயன் என்னவெனில், சிருங்காரரஸம் ஒன்று இருக்கும்பக்ஷத்தில் எப்படி எல்லாஸ்வபாவங்களும் அந்த ரஸத்திற்கு ஏற்படுகிறதோ, அப்படியே பொறுமையாயுள்ள ராஜனுக்கு மற்றைய எல்லா ராஜர்களும் ஸ்நேகிதர்களாக ஏற்பட்டு அவன் காரியத்தை அவர்களே முடித்துவைப்பார்கள். மேலும் சாஸ்திரப்படி ஔஷதத்தை உபயோகப்படுத்துகிறவனையும் தேவதைகளைத் தியானம்செய்யும் நிமித்தம் தெய்வாலயங்களில் வாசஞ்செய்கிறவனையுமுள்ள வைத்யனாலே எவ்விதம் விஷப்பாம்புகள் ஸுலபமாய் வசப்படுத்தப்படுகின்றனவோ, அவ்விதமே தன் ராஜ்யத்தின் ரகஸ்யங்களையும், அன்யராஜ்யத்தின் ரகஸ்யங்களையும் ஆலோசிப்பவனையும், ஸாம பேத தான தண்டம் முதலிய உபாயங்களால் பிறருடைய ராஜ்யங்களை ஜயிக்கிறவனையுமுள்ள ராஜச்ரேஷ்டனால் சத்ருக்கள் ஸுலபமாய் ஜயிக்கப்படுகிறார்கள்.

கெட்டிக்காரனாயிருப்பவன் ஆலோசனை செய்தலையும் உத்ஸாஹ சக்தியையும் தன்னிடத்தில் ஸம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்று நான் சொன்னதற்குக் காரணம் என்னவென்றால், பின்னால் வரப்போகிற ப்ரபுசக்திக்கு அவ்விரண்டும் தான் ஆதாரமாக இருக்கின்றன என்று முதலிலேயே தெரிவித்திருக்கிறேன். மந்திராலோசனை செய்யும் சக்தியைப் பெருங்காரணமாகவுமுடைய உத்ஸாகம் என்ற

வ்ருக்ஷமானது சாச்வதமாயுள்ள ப்ரபுசக்தி என்றபழத்தைக் கொடுக்கப்போகிறது. ஆகையால் மந்திராலோசனை, உத்ஸாஹம் இவையிரண்டும் அவசியம். எப்படிப் புல்லாங்குழலின் ஸ்வரம் இனிமையாயும் ப்ரதானமாயுமிருக்கலால், மற்ற ஸ்வரங்கள் யாவும் அந்த ஸ்வரத்திற்குக் கீழ்ப்படிந்த பக்கவாத்தியங்களாக ஆகின்றனவோ, அப்படியே ஜயிக்கவேண்டுமென்று விருப்பங்கொண்ட அரசனை மந்திரசக்தி உத்ஸாஹசக்தி இவைகளுடன் கூடியவனாகவும் கீர்த்திவானாகவுமிருக்கால், மற்ற அரசர்கள் அவ்வரசனுக்குப் பரிவாரங்களாக ஆவார்கள். மேலும் எப்படி, பேரிபடக மாசமட்டமண்டிமம் முதலிய வாத்யங்களின் சப்தங்களும் ஆகாயத்திற்போய்ச் சேருகின்றனவோ, அப்படியே அரசன் ஒருகாரியமும் செய்யாமற்போனாலும், அவன் பரிவாரங்கள் செய்த எல்லாக்காரியங்களும் அவனைத்தான் அடையுமேயல்லாது மற்றுயாவரையும் அடையாது. மேலும் ஒரே நூலிற் கோர்க்கப்பட்ட அநேக முத்துக்களின் வரிசையில் நடுநாயகக் கல்லானது எப்படி விளங்கிக்கொண்டிருக்கிறதோ அப்படியே, சத்ருக்கள், பரிவாரங்கள் ஆகிய இவர்களுடைய கூட்டங்களில் ராஜன் ஒருவன்தான் விளங்குகின்றான்.

“ஆகையால் பலத்தையடைய விரும்பும் புருஷன் எப்படி மருந்து சாப்பிட்டுச் சரீரத்தை ஸ்திரமாகவும் பலமுள்ளதாகவும் செய்துகொள்கிறானோ, அப்படியே ப்ரபு, மந்திரம், உத்ஸாஹம் ஆகிய இம்மூன்று சக்திகளையடைய விரும்பும் ராஜன் சந்திவிக்ரஹம் முதலிய ஆறுகுணங்களாகிய மருந்தையுட்கொண்டு தன் ராஜ்யத்தை ஸ்திரமாகவும் பலமுள்ளதாகவும் செய்துகொள்ளவேண்டும். மேலும் செய்யவேண்டிய காரியங்களில் பொறுமையுள்ள சரீரிகளுக்கு (மனிதர்களுக்கு) ப்ரயத்னமிருக்கும்பக்ஷத்தில் எப்படி வ்ருத்தி ஏற்படுகிறதோ, அப்படியே பொறுமையுள்ள ராஜர்களுக்கு ஆறுகுணங்களின் ப்ரயோகமிருக்கும்பக்ஷத்தில், ப்ரபு, மந்திரம், உத்ஸாஹம் ஆகிய மூன்று சக்திகளால் வ்ருத்தி ஏற்படும் என்பது நிச்சயம். ஆனால் தகுந்த பலமில்லாமல் காரியத்தை ஆரம்பித்தால் அந்த ஆரம்பமானது அனர்த்தத்திற்குக் காரணமாக ஆகும் என்

பரீக்ஷயம். ஆகையால் நாம் தகுந்தபடி ஏற்பாடு செய்யாமல் இக்கார்யத்தை ஆரம்பிக்கக்கூடாது. ஏனென்றால் உதாத்த ஸ்வரமானது எப்படி ஒரு லக்ஷணத்திலேயே மற்ற எல்லா ஸ்வரங்களையும் அடக்கிவிடுகிறதோ அப்படியே அந்தச் சிசுபாலன் ஒரு அம்சத்திலேயே சத்ருக்களைத் தொலைக்கடிப்பான். இச்சப்பல ஒருவன் நம்மை என்ன செய்யமுடியும் என்று நினைக்காதே. எப்படி ஸ்வபரோபகாரமானது மற்ற ரோகங்களுக்கெல்லாம் இருப்பிடமாக இருக்கிறதோ, அப்படியே இந்தச் சிசுபாலன் மற்ற ராஜர்களுடைய உடைக்கத்தையும் சிநேஹிதத்தையும் உடையவனாக இருக்கிறான். எப்படிப் பாணமானது நாண்கட்டிய வில்லையடைகிறதோ, அப்படியே இவனுடைய சிநேகிதனான பாணாஸுரன் பௌர்பம் முதலிய முனைகளெல்லாம் கூடிய இச்சிசுபாலனுக்குத் சகாயமாகவந்தடைவான் என்பது திண்ணம். இன்னும் எப்படி அந்தகார இருளானது ஸாயங்காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதோ அப்படியே தலன், யவனன், சாலவன், ருக்மி, பீஷ்மகன் முதலிய மற்ற துஷ்டர்களும் இந்தச் சிசுபாலனை எதிர்பார்த்துக்கொண்டு இவனுக்கு உபகாரஞ்செய்ய வந்திருப்பார்கள், அப்படியல்ல, பாணாஸுரன் முதலியவர்கள் நம்மிடத்தில் பயந்தவர்களானதால், நமக்கு விரோதமாக ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று நினைக்காதே கிருஷ்ணா! அக்னியுடன் கூடிய கட்டைகளை எப்படிக் காற்று அதிகமாய் ஜ்வலிக்கச்செய்து எரியும்படி செய்கிறதோ அப்படியே உன்னிடத்தில் கோபங்கொண்ட பாணாஸுரன் முதலியவர்களை உன்னிடம் அதிகக் கோபங்கொள்ளும்படி தூண்டிவிடுவான். மலையருவியானது கங்கை முதலிய பெரிய நதிகளின் மூலமாய் எப்படி ஸமுத்ரம் போய்ச்சேருகிறதோ. அப்படியே உபாயனாயிருந்தாலும் அநேக ஸஹாயங்களைவைத்துக்கொண்டு காரியங்களை முடித்துக்கொள்கிறான். மஹாவீரனான சிசுபாலனைப்பற்றிக் கேட்கவும் வேண்டுமோ? மேலும் அந்தச் சிசுபாலனுக்குச் சிநேகிதர்களாயும் உனக்கு விரோதிகளாயும் இருப்பவர்கள் உன் சத்ருவைச் சேருவார்கள். இவர்களைத் தவிர்த்து மிஞ்சிய சிலர்கள்தான் உன்னைச் சேருவார்கள். எப்படியிருந்தாலும் அவனுக்குத்தான் சிநேகிதர்கள் அதிகமாக ஏற்படுவார்கள். ஆகையால் இவ்விதம் அசலத்தில் சண்டைசெய்ய ஆரம்பித்தால் ஸகல ராஜர்களும் அவனுடன்தான் சேருவார்கள்.

(தொடரும்)

S. Parthasarathy, Srirangam.

தால் அளவினா வேறுபாடுடையதாய்த் தோன்றும். ஒன்றாக்கினால் மரமென்னும் ஒரேபொருளாகின்றது. முற்றிலும் வேறுபட்டவைகள் ஒரே பொருளாய் எப்படிச் சமையக்கூடும். 'மரம்' என்ற தன்மை இவை ஒவ்வொன்றிலும் ஒரே ரீதியாய் ஓடவில்லையா? " ஏகமேவாத்விதீயம் " என்ற உண்மையை இதைவிடத் தெளிவாய் எங்ஙனம் எடுத்துரைப்பது.

இயற்கையின் உண்மையழகைச் சொற்களில் அமைத்துப் பாடும் கவிகளை எடுத்துக்கொள்வோம். அவர்களும் பொதுமையால் நிலத்தில் மனிதனையும், கயவரில் கடலையும், சந்திரனை முகத்திலும், அன்னத்தில் நாரிமணிகளையும், மேகத்தில் வள்ளலையும் ஒன்றாகவே பார்க்கிறார்கள். பாறைகள் ஒன்றின்மேலொன்றா யடுக்கப்பட்டிருக்கும் வரிகளை, மனிதரின் நெற்றியிற் காண்கிறோம். இங்கும் அபேதமே பாடப்படுகிறதை நன்கு கேட்கலாம்.

சுருதி, யுக்தி யனுபவங்களை எடுத்துக்கொண்டு பார்த்தோம். ஒரே குரலோடு இம்மூன்றும் " அபேதம் " என்பதையே பாடுகின்றன. ஒன்றிலிருந்து மற்றவைகளிலில்லாதுபோனால் இது நிலைபெறுவதற்கியலாது. அங்ஙனமின்றி ஒரேகாலத்தில் மூன்றனுள்ளும் பொருந்து கிடப்பதால் இதை எவராலும் அசைக்கப்படாது. ஆகவே எல்லாப்பாகங்களிலும் இதை அங்கீகரித்தே தீரவேண்டும். அதுவே அறிவுடைய செயலாகும்.

அபேதம் என்று பேசியதன் பேதமே யில்லையென்பதன் பொருட்டல்ல. பேதத்திற்கும் நாம் ஒரு இடம் கொடுக்கிறோம். ஆனால் பேதம் அதற்குக்கொடுக்கப்பட்ட இடத்தை விட்டு வெளியேறிவிடாமல் பாதுகாக்க வேலிகட்டவேண்டும் என்று ஆசைமட்டும் உண்டு. இங்கொரு கேள்வியெழலாம். அபேதமும் பேதமும் இயற்கையில் ஒரேகாலத்தில் எவ்வாறு மருவிநிற்கமுடியும்? இருளை ஒளி எவ்வாறு மருவிநிற்றல் கூடும்? என்பதே. கண்களைத்திறந்து பாருங்கள். முற்றிலும் விரோதபாவங்களுடையவையாய்த் தோன்றுமவைகள், ஒரே பொருளாகவும் ஒரே இடத்தில் மருவி நிற்கவும் காண்

யீர்கள். வான வில்லின் நிறங்களை வீசித் தாவள்ளிய வெண்மையையும் கருங்கல்லுக்கும் மேற்பட்ட வன்மையையும் உடைய வைரமென்கே! பார்க்கப்பிடிக்காது மிகக் கரியதாய்த் தன்னைத் தொட்டவற்றிற்கெல்லாம் தன் கரிய நிறத்தைக் கொடுத்து விகாரப்படுத்தியும் மிக மெல்லியதாயுமுள்ள ஒருதண்டுக் கரியெங்கே! இவ்விரண்டும் ஒரே பொருளன்றி வேறில்லையென்று பூதசாஸ்திரிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

வெளியே போவானேன். நம்மையே யெடுத்துக்கொள்வோம். ஆன்மா, சரீரம் இவ்விரண்டும் எத்தகைய வேறுபாடுடையது என்று பாருங்கள்.

முக்காலங்களிலும் மாறுதல் இலாது ஒரே தன்மையாகி அழிவற்று அறிவானந்தமாக விளங்கும் ஆன்மா ஒன்பது வாயில்களின் வழியாயும் ஸதா மலத்தையே யொழுக்கிக்கொண்டு நரை திரை மூப்பு பிணி யெனும் விகாரங்களுளதாய் அழிந்துபோம் உடலில் எவ்வாறு மருவி நிற்கிறது பாருங்கள்.

வேறுபாடு வெளியே தோன்ற ஒற்றுமை உள்ளாடி ஓடுகின்றதென்பதை, நீங்கள் தாராளமாய் அங்கீகரிக்கலாம். இதில்தான் அழகு செறிந்திருக்கிறது. இயற்கையின் கதியும் இதனுலேயே ஸாத்தியமாகின்றது.

இங்ஙனமின்றி, வெளியிலும் ஒற்றுமையே யிருப்பதாக வைத்துக்கொள்வோம். எல்லா மனிதர்களும் பார்வைக்கு ஒரே மாதிரியாக இருந்தால், குடும்ப வாழ்வாவது சமூக விருத்தியாவது ஏற்படுவதற்கு இடமுண்டாகுமா? இவ்வளவேன் இரண்டு மூன்று பேர் ஒரேமாதிரி தோன்றுவார்களாயின், என்ன பரிதாபமான கஷ்டநிலை ஏற்பட்டுவிடுகின்றது எனத் தமபத்திசம்பவத்தில் விளங்கவில்லையா? பேதம் வெளியே இருக்கத்தான் வேண்டும். ஆனால் அபேதத்தின் இடமாகிய உள்ளே நுழைந்துவிடக்கூடாது.

இடக்கினால் வருவதென்னவென்று பின்வரும் கதையால் நன்கு விளங்கும். ஆகாயத்தில் உயரக் கம்பீரமாகப் பறந்து வட்ட

மிட்டுக்கொண்டிருக்கும் ஒரு கருடனைப்பார்த்துப் பரமசிவனுக்குப் பூஷணமாயிருந்த ஒரு பாம்பு புன்முறுவலுடன் "ஓய் கருடனே சௌக்கியமாகவிருக்கிறீரா?" என்று கேட்டது. "இருக்கும் இடத்தில் எல்லாம் இருப்பின் சௌக்கியமாகவேயிருக்கும்" என்று கருடன் பதிலளித்தது. நேயர்களே! இவ்வசனத்தை எப்பொழுதும் நீங்கள் மனதில் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். இடம் தவறினால் அந்தப் பாம்பு எப்படிச் சாகவேண்டிவருமோ அதேபோலப் பேதமும் இடம் தவறிவிட்டால் அழிவையே தரும். அபேதக் கயிற்றில் பேதமணிகளைக் கோர்த்தால் அணிவதற்கு மிக்க நல்ல ஆரமாகும்.

இயற்கையில் வேலைகளெல்லாம் நடப்பதற்கு மேலே எடுத்துக் காட்டியுள்ள தர்மம் அவசியம் என்று சொன்னேனும். அதை இரண்டொரு உதாரணங்களால் இந்த விளக்குவோம். கோடைகாலத்தில் நாம் திருக்குற்றாலத்திற்குப் போகிறோம். எதற்காகவெனின், அங்குள்ள நீருவியில முழுகவும், அடிக்கும் இனிய சாரலுக்குமேயாகும். நாம அருவியைப்பற்றிச் சிறிது ஆராய்வோம். மேட்டிலிருந்து பள்ளத்திற்கு நீரோடுவதாலேயே இவ்வருவி உண்டாகிறதென்று பார்த்தோம். ஆகவே இவ்வருவி நிகழவேண்டுமெனின் ஒரு மேடும் அதைபடுத்தொரு பள்ளமும் நிலைகதிருக்கவேண்டுமென்று எளிதிலுணர்ந்துவிடலாம். இவைகளுள் ஒன்று மற்றொன்றின் நிலைமைக்கு வந்துவிட்டால் இவ்வேலையே நடக்கமுடியாது. இதனின்றும், இயற்கையின் இக்காரியம் நடைபெறவேண்டுமேயெனின், ஒன்றுக்கு ஒன்று நேர் எதிர்மறைத் தன்மையுடைய இரண்டு சாதர்ப்பங்கள் இன்றியமையாதன என்று தானே புலப்படுகிறது. நீங்கள் சொலவிலங்க விதி இதை காணப்படவில்லையே யென்று கேட்கலாம். நேயர்காள்! சற்று நிதானத்துடன் யோசியுங்கள். இவ்வேலையின் நோக்கம் என்ன? இரண்டு பாத்திரங்கள் ஒன்றுக்கு ஒன்று சமீபத்தில் இருப்பதாயும் அவைகளில் வெவ்வேறான மட்டங்களில் தண்ணீர் இருப்பதாயும் இவை இரண்டையும் நீர் பாயக்கூடிய ஒரு குழாயால் சேர்த்திருப்பதாயும் வைத்துக்கொண்டால், அங்கு என்ன பார்ப்பீர்கள். தண்ணீர் மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டத்திற்கு

ஓடிக்கொண்டிருந்து இரண்டிலும் சமமட்டத்திற்கு வந்த பிறகு அப்படியே நின்றுவிடும். ஆகவே தண்ணீர் பாய்வதன் நோக்கம் அபேத நிலையை ஏற்படுத்தவென்றே யாகிறதல்லவா? அருவியில் நீர் பாய்வதும் அபேத நிலையை நாடித்தான் ஆகும். முற்றிலும் எதிர்மறையாய்த் தோன்றுபவைகளின் இடையே அபேதம் என்ற லட்சியத்தைக்கொண்டு ஒருவேலை நடக்கிறதென்றால் என்ன நினைக்கிறீர்கள்? இவை இரண்டும் விரோதபாவமுடையவைதாம் என்பது உண்மையாயின், ஐக்கிய லட்சியம் இவை இரண்டிற்கும் இடையே தங்கமுடியுமா? ஆகவே இவையிரண்டினுள்ளும் அபேதம் என்ற தன்மை கட்டாயம் ஓடிக்கொண்டுதானிருக்கவேண்டும். பேதம் வெளியில்தான் தோன்றுவதாகும். இக்காரியம் ஏற்கனவே எடுத்துக் காட்டப்பட்ட விதியை அனுஸரித்தே நடக்கிறதென்று தெளிவாய் விளங்குகிறது. இதில் எத்தனை அழகும் ஆனந்தமும் விளைகின்றதெனப் பாருங்கள். அருவியினின்றெழும் தூவானத்தில்கூட என்ன அழகான வானவில்லுகள் மனதைக் கவர்கின்றனவென்று பாருங்கள்.

நேயர்காள்! குற்றாலத்துக்குத் தென்காசியிலிருந்து போகிறதாக வைத்துக்கொள்வோம். குற்றாலத்தின் எல்லைக்குள் சென்றதுமே, அருவியின் அழகு நம்மை ஈடுபடச்செய்துவிடுகின்றது. ஆஹா! அதைப் பார்த்தவுடன் நம்மனதில் ஏதாவது கவலையுண்டா? விசாரம் உண்டா? எல்லாம் எப்படிப்போயது என்று நம்மால் நினைக்கமுடியாத அத்தனை வேகமாகப் பறந்து ஓடிவிட்டது. நம்மனதில் அப்பொழுது ஒருசலனமும் இன்றி, அரிய உத்ஸாஹமும் ஸந்தோஷமும் நர்த்தனம் செய்யும். வாவா, ஆச்சரியம் இவையிரண்டோடு மனத்தையும் விழுங்கிவிடுகிறது. நம்மைப் பற்றிய நினைவேயில்லை, நம்மையே மறந்துவிட்டோம். பேச நாவெழவில்லை.

ஆனந்த லஹரி ஏறிவிட்டது. ஸ்தம்பாகாரமாய் நின்றுவிட்டோம். கண் தானாகவே மூடிக்கொண்டுவிட்டது. அருவிபார்வையினின்றும் பாய்ந்துவிடவே, அதெங்கே, அதெங்கே, எல்லாக் கரணங்களும் தேடப் புறப்படுகின்றன. நம்முடைய புத்தி திரும்பவும்

நம் வசத்திற்கு வந்துவிட்டது. கண்களும், திறந்துகொண்டன. இப்பொழுது எங்கு இருக்கிறோம் என்று உள்ளே ஒரு நாதம் கிளம்ப நாம் பார்க்கிறோம் என்ன காண்கிறோம். முழுமுதற்பொருளாகிய கடவுளின் ஸன்னிதானத்தில் நிற்கிறோம். ஒருவினாடி கடவுளைப் பார்ப்பதாக நினைக்கிறோம். அடுத்த வினாடியில் அருவியைக் கண் கொண்டுவந்து விட்டுவிடுகின்றது. இங்கா! அங்கா! என்று ஊசலாடுகின்றது. இதற்கிடையே, அழுக்குப்பற்றியிருப்பது ஞாபகத்தில் வர அருவிக்குள் நின்றுவிடுகின்றோம். அழுக்குக களைந்தாயிற்று. கடவுளிடத்திற்குப் போக ஸித்தமாகிவிட்டோம். சித்தம் சலிக்கவில்லை. அருவியை விட்டு வெளியே வரும்பொழுது திடசித்தத்துடன் கடவுளிடத்திற்கே போவதென்று நினைக்கிறோம். வெளியே வந்தவுடன் பக்கத்திற் பார்க்கப் பன்னிறவானவில் நிற்கிறது. நாம் அடையும் ஆனந்தம் அளவிடற்கரியது. அதோ! நீ பாரிடம் போகவேண்டும் என்று வெளிவந்தனை போ அவர் இருப்பிடம் வானுக்கும் அப்பாலுள்ளது. அவ்வருங்கனியைப் பெறவேண்டிலோ, இங்கு நிற்றல் பயன்படாது. ஆனால் வானேறி அங்கு சென்றும் இவ்வில்லில் ஓர் அம்பை நாணேற்றி விடுவாயானால் அக்கனியைத் தீண்டலாம் என்று உள்ளிருந்து ஒரு குரல் கேட்க, உயர ஏறினேன். ஆ! அங்கும் நீர் ஓடிக்கொண்டிருந்தது. நான் நினைத்தேன். ஆஹா! நாம் இத்தனை தூரம் ஏறிவர நெறிகாட்டியது, இந்நீரே யல்லவா. எத்தனை சுலபமாக இது என் மனக்கவலைகளையெல்லாம் நீக்கி அழகையும் ஆனந்தத்தையும் காட்டி என்னைத் தனித்தழைத்து அழுக்கைப்போக்கிக் கடவுளினிடத்திற்கே போவேன் என்ற நிச்சயத்தை உண்டாக்கி, எங்கு தன்னோடு நின்றுவிடுகிறேனோவென்றஞ்சி, குளிரால் வெளியேறச்செய்து வானவில்லைக்காட்டி நீ பெற விரும்பும் கனி அப்பாலுள்ளது. வான் நின்று இவ்வில்லை உபயோகப்படுத்துவாயானால், எளிதில் அக்கனியைக் கொய்துவிடலாமெனச் சொல்லி உயரவும் ஏற்றிவிட்ட பரம ஆசாரியனல்லவா! இதற்கு நம்மால் கைம்மாறு செய்யமுடியுமோ! உயர ஏறிக் கனியைக் கொய்தோமென்றால், அக் கனி கீழே விழும்பொழுதே விழும் தேனைப் பருகி

நான் மயங்கிப்போயிருப்பேனே. அப்பொழுது, இத்தனைப்பேற்றுக்கும் காரணபூதமாயிருந்த இதனை நினைப்பதும் முடியாது போய்விடுமே. “எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு” எனவிருக்கின்றதே. இந்நன்றியை மறந்தால் அப்பேறுபெற்றும் உபயமடியாதாகப்போய்விடுமேயென்று இவ்வாறாகவெல்லாம் நினைந்து இனிப்பெறும்பேறு நிலைத்திருந்து வாழ்ப்பவும் வேண்டுமே என்ற ஆசையாலும், கைம்மாறு தகுந்தபடி செய்யும் ஆற்றல் இலாமையாலும், அச்சந்தருணத்தில் செய்யக்கூடியது இது ஒன்றேஎன நிச்சயித்து, கீழே யிறங்கி, அதற்கு நமஸ்காரம் செய்யப்போனேன். கரைபோரத்திலே இருந்ததால் கால் வழுக்கவே அதிக விரைவாய் ஓடும் அவ்வாற்றினுள் விழுந்துவிட்டேன். அவ்வாறே அதிக விரைவாய் இழுத்துக்கொண்டே போய்விட்டது. மயக்கம் வந்து மூடிக்கொண்டது; ஒன்றுமே தெரியவில்லை.

நாலைந்துமணி நேரத்திற்குப் பிறகு மயக்கம் தெளியத் துவக்கிற்று. முன்பின் பழக்கமில்லாத அநேகாயிரம் கண்டங்களினின்றும் எழும் பல நாதங்கள் என் செவிகளை விழுங்கின. அவர்களெல்லோரும் “இப்பொழுது எப்படியிருக்கிறது” என்று பக்கத்திலிருந்தவர்களைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். உடனே கண்களும் திறந்தன. முன்பின் எனக்கறிமுகமில்லாத அநேகர் சூழ்ந்து நிற்கச் சிலர் மிகப் பரிவுடன் சைத்தியோபசாரங்கள் செய்துகொண்டிருந்தனர். முதலில் ஆச்சரியமும் பிறகு ஸந்தோஷமும் என் முகத்திற்றோன்றியது. சுற்றிலும் பார்த்தேன். எல்லா முகங்களிலுமே ஸந்தோஷக்குறிகள் தென்பட்டன. எந்தவிடத்திலிருக்கிறேன் என்று பார்க்க ஒரு பொதுச் சாவடியென்றுணர்ந்தேன். இவ்வுணர்ச்சியோடு எனது சக்திகளெல்லாம் பூரணமாக என் வசத்திற்குத் திரும்பிவிட்டன. எழுந்துட்கார்ந்தேன். பக்கத்திலுள்ளவர்கள் இப்பொழுது நீ எவ்விதவேலையும் செய்யச் சக்திபெற்றிருக்கிறாய். சில நாட்கள் படுக்கையிலேயே யிருக்கவேண்டும். உன் காயங்களெல்லாம் குணமுற்ற பிறகே எழுந்து உலாவலாம் என்று சொன்னார்கள்.

என்னையும் எனது அவயவங்களையும் நோக்கினேன். இவ்வார்த்தைகள் அன்பு நிரம்பிய இதயத்திலிருந்து வெளிப்பட்டதாகவே தோன்றியது. ஊகமதி இவைகளைச் சொல்லவில்லையென்றறிந்தேன். ஏனெனின், இவர்கள் சொல்லியது உண்மையல்ல. என் நரம்பு மிகத் திடத்துடனேயேயிருந்தன. எழுந்து நின்றுகொண்டு எல்லோருக்கும் ஏழையாய என்மேல் இத்தனை இரக்கமும் அன்பும் காட்டியதற்காக நன்றிபாராட்டி இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லி வந்தனமும் செய்தேன். ஒரே குரலாக அத்தனைபேர்களும், உன்னிலும் வேறுபட்டு இங்கு யாராவதிருந்தால், அவர்களுக்கு வந்தனம் செய்துகொள். இங்குக் காணும் அனைவரும் உனது அவயவங்களே. உன்னுடைய கைகளுக்கு உனது வாயே உபசாரம் செய்வதுண்டானால் எங்களுக்கும் உபசாரம் செய்தல் தகும். நீயே யோசித்துப் பார். உண்மை தானுமே விளங்கும் எனச் சொல்லி எல்லோரும் அகன்றுவிட்டனர்.

எல்லோருமே அகன்றுவிட்டனரே எனது பேனாவையுமே அகற்றிவிடலாமே யென்று பேனாவைக் கீழே வைத்துவிட்டேன். வியாசத்தை ஒருமுறை படித்ததும் 'கல்யாணம் செய்யப் போய்த் தாலிகட்டாது வந்த' கதையாயிருக்கிறதைப் பார்த்துவிட்டு வெட்கினேன். ஜனசேவை யென்று தலைப்பெயர்கொண்டு ஒருவியாசத்தை எழுதி அதில் ஒருமுறைகூட ஜனசேவை யென்று சொல்லாமலே வியாசத்தை முடிக்கக் கருதிவிட்டது ஆச்சரியமே.

நிற்க, நேயர்காள்! இதற்கு முன் சொல்லியவற்றாற் பெறப்படும் முடிவு என்ன என்று பார்ப்போம். முதலில், இப்பிரபஞ்சத்திற்கு அஸ்திவாரம் அபேதம் என்ற அசைக்கமுடியாத தர்மமே யாகும். ஆகவே இதை மனித வகுப்பாரிடத்துப் பொருத்திப்பார்க்க எல்லோரும் அபேதமாகவேயிருக்கிறோம் என்று புலப்படும். ஆகவே எல்லோரும் ஸமமே, சகோதர நேயராவார்கள். ஆகவே, தன்னைக் காப்பாற்றிக்கொள்ளல் எவ்வாறு ஒருவன் செய்யவேண்டியவற்றுளெல்லாம் தலையாகுமோ, அதுபோலவே. தம்மில் அபேதமாய் நிற்

கும் அனைவர்க்கும் உழைக்கவேண்டுவதும் ஒருவன் கட்டாயமாகச் செய்தேதீரவேண்டிய காரியமாகும். இதுதான் ஜனசேவை என்று வடமொழியில் சொல்லப்படும். ஆகவே ஒருவன் தனக்கு அந்தந்த காலதேச வர்த்தமானத்திற்குத் தக்கபடி, தான் முன்னேறும் மார்க்கத்திலோ, அல்லது தனக்கு வந்துற்ற இடுக்கண்களைக் களைவதிலோ எவ்வாறு கண்ணுங் கருத்துமா யிருக்கவேண்டுமோ அவ்வாறே ஏனையோருடைய வாழ்வை மென்மேலும் மேன்மையடையும்படி செய்வதிலோ அல்லது ஒருவேளை அன்னவர்க்குத் தாழ்வு வருமென்று தோன்றினால் அதனின்றும் தடுப்பதிலோ கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டும்.

நாம் அபேதம் என்று மாத்திரம் சொல்லி நிறுத்திவிடவில்லை. பேதமும் இருக்கிறதெனச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, அபேதத்தினால் ஜனசேவை அவசியம் என்றேற்படப் பேததர்மத்தையொட்டி, ஸேவையின் தன்மையும் பேதப்பாடாகவிருக்கவேண்டும். ஆகவே ஒருவன் தனக்கென எந்தக்கருமங்களைச் செய்துகொள்ளுகிறானோ, அதே கருமங்களைப் பிறர்க்கும் செய்யாது, அவரவரது நிலையைக் கவனித்து அதற்குத் தகுந்தபடி செய்யவேண்டும் என்கிறது. தன்னுடைய குடும்பத்திற்கு அன்னவஸ்திராதிகளுக்காக ஒருவன் உழைத்து அதையுதவவேண்டியவனாகிறான். இக்கருமத்தைச் செய்துமுடிப்பதில் அவன் தவறக்கூடாது, அதுபோலவே அனைவருக்கும் உழைத்துக் கருமசித்தியும் பெறவேண்டும். என்று யாரேனும் சொல்லுவார்களோ? அது முடியுமோ, ஆகவே ஒருவன் தனக்கோ தன் குடும்பத்தினர்க்கோ, தன் வகுப்பாருக்கோ, தன் மதத்தினருக்கோ, தன் தேசத்தாருக்கோ, அல்லது எல்லா மனிதர்களுக்கோ உழைக்கவேண்டும் என்று கொள்ளவேண்டுமேயன்றி இவ்வனைவருக்குமே ஒரே காலத்தில் ஒரே தன்மையாய் உழைக்கவேண்டுமெனக் கொள்வது மதியீனத்தோடு மிகக் கேடுவிளைவித்து யாருக்கும் யாதொரு பயனையும் தராது செல்லும். ஆகவே நேயர்களே! இக்கு நீங்கள் அதிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இவ்வாறாக மனிதன் பலருக்கும் செய்யவேண்டிய கடமைகளுள்,

அநேக மாதங்களாக யோசனைசெய்து, கடைசியாய், சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளை முடிவுசெய்து எழுதினார்கள். பிறகு துணையரசர்கள், அந்நிபந்தனைகளை ஜர்மானியர்களின் பிரதிநிதிகளிடம் கொடுத்து அவர்களுக்குள்ள ஆட்சேபனைகளைச் சொல்லும்படி கேட்டார்கள். அவர்களுடைய ஆட்சேபனைகளை யோசித்துப்பார்த்து, முதலில் ஏற்படுத்திய நிபந்தனைகளைக் கொஞ்சம் மாற்றிப் பின்பு மாற்றப்பட்ட நிபந்தனைகளை ஒப்புக்கொள்ளும்படி, ஜர்மானியரைக் கேட்டுக்கொண்டார்கள். இந்நிபந்தனைகளை ஒப்புக்கொள்ள முடியாதென்று ஜர்மானியர்கள் உரக்க ஆட்சேபித்தார்கள். ஆனால் துணையரசர்கள், சமாதான உடன்படிக்கையின் நிபந்தனைகளை இன்னும் மாற்ற உடன்படமாட்டார்களென்றும், தடுத்து ஆட்சேபிக்கத் தங்களுக்கு சக்தியில்லையென்றும் கண்டறிந்தார்கள். ஆகையால், ஜர்மானியர்கள், ஏற்பட்ட நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு உடன்படிக்கையில் கையொப்பமிட்டார்கள்.

3. சமாதான நிபந்தனைகளை முடிவுசெய்வதில் துணையரசர்கள் கொண்டிருந்த நோக்கங்கள் என்னவென்றால், ஜர்மானியர்கள், மற்றத் தேசத்தார்களைப் பயப்படுத்தவாவது தாக்கவாவது கூடிய நிலைமையில் அவர்கள் மறுபடியும் இருக்கக்கூடாதென்பதும், ஜர்மானியர்கள் மற்றத் தேசத்தார்களுக்கு உண்டாக்கிய நஷ்டங்களை, அவர்கள் சொத்தினின்றும் தக்கபடி அவர்கள் கொடுக்கவேண்டுமென்பதை நிச்சயப்படுத்தவேண்டுமென்பதும், சண்டை நடக்கும் காலத்தில் குரூரமான செய்கையாவது, சட்டவிரோதமான செய்கையாவது, செய்திருந்த குற்றவாளிகளை, நியாயப்படி தண்டிக்க வேண்டுமென்பதும், ஜர்மானியராலும் அவர்களின் துணையரசர்களாலும் நியாயவிரோதமாய்த் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தப்பட்டிருந்த தேசத்தார்களையும், சாதியார்களையும் அவர்களிடமிருந்து விடுவித்து, அவர்களைத் தாங்களே தங்கள் தங்கள் இராச்சியங்களை ஆண்டுகொள்ளும்படி விடவேண்டும் அல்லது அவர்கள் யாரோடு சேர்ந்திருக்க விரும்புகிறார்களோ, அத்தேசத்தார்களோடு அவர்கள் சேரவேண்டுமென்பதை நிச்சயப்படுத்தவேண்டுமென்பதுமேதான்.

சமாதானத்தின் மிகவும் முக்கியமான நிபந்தனைகள் அடியில் வருவனவைகளே;—

தேசக்கூட்டுறவுச் சட்டவிரோதமான குற்றம் செய்தவர்களைத் தண்டித்தல்:—தேசக்கூட்டுறவுச் சட்டத்திற்கும், உடன்படிக்கைகளின் தெய்வீகத்திற்கும் விரோதமாய்ச்செய்த குற்றத்திற்காக, கேய்ஸர் நியாயவிசாரணைக்குள்ளாக்கப்படுவார். போர்செய்யும் சட்டங்களுக்கும் வழக்கங்களுக்கும் விரோதமாய், குரூரமும் சட்ட விரோதமுமான செய்கைகளைச் செய்த ஜர்மானியர்கள், போர்க்குரிய நியாயசபையாரால் விசாரணை செய்யப்படும்படி, துணையரசர்களிடம் ஒப்புவிக்கப்படுவார்கள்.

கீழாக்கப்பட்ட ஜாதியார் முதலியவர்களை விடுதலைசெய்வித்தல்: ஏறக்குறைய 50-வருஷங்களுக்குமுன் பிரான்சு தேசத்தாரிடமிருந்து, ஜர்மானியர் கைப்பற்றியிருந்த அல்சாஸ் லோரேயின் என்னும் மாகாணத்தைப் பிரான்சியருக்கு ஜர்மானியர் திரும்பவும் விட்டுவிடவேண்டும்; அல்சாஸ் லோரேயின் என்பது இந்த ராஜதானியிலுள்ள ஒரு ஜில்லா அவ்வளவு விஸ்தீரணமுள்ளது. அதில் 20-லட்சம் ஜனங்கள் இருக்கிறார்கள்; அநேக ஐஸ்வரியமுள்ள பட்டணங்களுமுண்டு. 50-வருஷங்களுக்கு முன்னதாகவே, டேன்மார்க்கு தேசத்தார்களிடமிருந்து ஷேல்ஸ்வீக் என்பதை ஜர்மானியர் கைப்பற்றிக்கொண்டார்கள். ஷேல்ஸ்வீக் தேசத்தில் வடபாகத்திலிருப்பவர்களில் பெரும்பான்மையோர் டேனிஷ்காரர்கள். இப்பொழுது அவர்கள், தங்கள் தேசம் திரும்பவும் டேன்மார்க்கு தேசத்தோடு சேர்க்கப்படவேண்டுமோ அல்லது ஜர்மானியர் தேசத்தின் ஒருபாகமாகவே இருக்கவேண்டுமோ என்பதை, ஓட்டு மூலமாய்த் தங்களுக்குள்ளே தீர்மானித்துக்கொள்ளும்படி அனுமதி பெற்றிருக்கிறார்கள். சுமார் 100-வருஷங்களுக்கு முன்னதாகவே, ஜர்மானியர் போலண்டு தேசத்தாரிடமிருந்து கைப்பற்றியிருந்த தேசத்தை, அவர்களுக்கு ஜர்மானியர் விட்டுவிடுகிறார்கள். இந்தத் தேசம், இந்த இராஜதானியில் இரண்டு அல்லது மூன்று ஜில்லாக்

களின் விஸ்தீரணமுள்ளது. ஜர்மானிய துறைமுகப் பட்டணமாகிய டான்ஜிக் என்னும் நகரம், யாரும் போகக்கூடிய நகரமென்று விளக்கப்பட்டிருக்கிறது. போலாண்டு தேசத்தார்கள், தாங்களும் அப்பட்டணத்தைத் துறைமுகமாய் உபயோகிக்கலாமென்று அனுமதி பெற்றார்கள். சேக்கோ ஸ்லோவர்க் என்பவர்கள் முன்னால் ஆஸ்திரியரின் அரசாட்சிக்குட்பட்டிருந்தார்கள். சண்டை நடக்கும் காலத்தில், அவர்கள் ஆஸ்திரியருக்கு விரோதமாய்க் கலகஞ்செய்து துணையரசர்களோடு சேர்ந்து சண்டைசெய்தார்கள். இப்போது, சேக்கோ ஸ்லோவர்க் என்பவர்கள் ஒரு தனியான தேசத்தார்கள் என்று ஜர்மானியர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். ஆபிரிக்கா தேசத்திலும் உலகத்தில் மற்றப்பாகங்களிலுமுள்ள ஜர்மானியரின்குடியேற்ற நாடுகளையெல்லாம் துணையரசர்களுக்கு அவர்கள் விட்டுவிடவேண்டும். ஏறக்குறைய இரண்டு வருஷங்களுக்குமுன், ஜர்மானியர், ருஷியர்களை வென்று, அவர்களோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டார்கள். அச்சமாதான நிபந்தனைகளின்படி ருஷியா தேசத்தில் ஜர்மானியர்களுக்கு அதிகச் செல்வாக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டது. ஜர்மானியர் ருஷியாவில் அநேக சுதந்தரங்களும் பெற்றார்கள். அந்த உடன்படிக்கை இப்பொழுது ரத்து செய்யப்பட்டது.

சேதப்படுத்தியதற்கு நஷ்டங்கட்டிக்கொடுத்தல்:—ஜர்மானியர், பிரான்சுதேசத்தில் படையெடுத்துச் சென்றபொழுது, பிரான்சியரின் நிலக்கரிச் சுரங்கங்களையெல்லாம் ஜர்மானியர் நாசமாக்கிவிட்டபடியால், இப்பொழுது, ஜர்மானியில், மிகவும் அதிகமான வரும்படியுள்ள சுரங்கங்களாகிய சார் பள்ளத்தாக்கிலுள்ள நிலக்கரி சுரங்கங்களில் தங்களுக்குள்ள பாத்தியதையைப் பிரான்சியர்களுக்கு, பதிலாக விட்டுவிடுகிறார்கள். சண்டை நடக்கும் காலத்தில், சாதாரண ஜனங்களுக்கும், அவர்களுடைய சொத்துக்களுக்கும் ஜர்மானியர் உண்டாக்கிய நஷ்டத்திற்காக, அவர்கள் பணம் கொடுப்பதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதில், கரைச்சேனைகளுக்கும் போர்க்கப்பல்களுக்கும் அவர்கள் உண்டாக்கிய நஷ்டம் சேரவில்லை. எவ்வ

ளவு நஷ்டம் உண்டாயிருக்கிறதென்பதை விசாரித்துக் கண்டறிய, ஒரு விசாரணைச்சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் கொடுக்கவேண்டிய மொத்தத்தொகையை இவ்வளவென்று பின்னால் குறிக்கப்படும். ஆனால் ஜர்மானியர்கள், இரண்டு வருஷங்களுக்குள்ளாக 1,200-கோடி ரூபாய்கள் கொடுக்கவேண்டும். குறைந்தது, 4,800-கோடி ரூபாய்கள் பின்னால் ஜர்மானியர் கொடுக்கும்படி நேரிடுமென்று எண்ணப்படுகிறது. இந்திய இராஜாங்கத்தார்களுக்கு ஒரு வருஷத்திற்குச் சுமார் 150-கோடி ரூபாய்கள்தான் வரி கிடைக்கிறது. சண்டையில் ஜர்மானியர் முழுகச்செய்த வியாபாரக் கப்பல்களுக்கெல்லாம் பதில் கப்பல்கள் கொடுப்பதாய் அவர்கள் சம்மதித்திருர்கள். ஆகையால் ஜர்மானியர் தங்கள் பெரிய வியாபாரக் கப்பல்கள் எல்லாவற்றையும், அவர்களுடைய சிறிய வியாபாரக்கப்பல்களில் பாதியும் அவர்களுடைய மீன்பிடிக்கும் கப்பல்களில் நாலில் ஒரு பாகத்தையும், உடனே, துணையரசர்களிடம் ஒப்புவித்து விடுவார்கள். இவைகளெல்லாம் சேர்ந்து அவர்களுடைய நீர்க்குள்ளோடும் கப்பல்களால், முழுகச்செய்யப்பட்ட கப்பல்களின் தொகைக்குச் சரியாகாததினால், ஜர்மானியர், அடுத்த ஐந்து வருஷங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு 50-கப்பல் வீதம் புதிதாய்ச் செய்து துணையரசர்களிடம் கொடுப்பார்கள்.

ஜர்மானியர்களின் சேனைகளைக் குறைத்தல்:—ஜர்மானியர்கள், ஒருலட்சம் மனிதர்களடங்கிய ஒரு சேனைதான் வைத்திருக்கலாம். ஆனால், சண்டை நடக்கும் காலத்தில், அவர்கள் ஒருகோடி மனிதர்களுக்கு மேலேயே சைனியத்திற் சேர்த்து அவர்களைக்கொண்டு சண்டைசெய்வித்தார்கள். இந்தியாவில், சண்டைக்கு முந்தி, சுமார் ஒன்றரை லட்சம் இந்தியப் போர்வீரர்களை இந்தியாவிலேயே வைத்திருந்தார்கள். ஜர்மானியர் எதாகிலும் விஷக்காற்றையாவது, ஆயுதம் வைக்கப்பட்ட மோட்டார் வண்டிகளையாவது தாங்களே செய்யவாவது, பிறதேசங்களிலிருந்து வரவழைக்கவாவது கூடாது. சண்டைக்குவேண்டிய மருந்து குண்டு முதலிய தளவாடங்களை வேறு தேசங்களிலிருந்து வரவழைக்கக் கூடாது; அவர்களுடைய சேனை

யைப் போர்முனைக்கு ஆயத்தமாய்ப் பழக்கித் தயார்செய்பவும், அவர்களுடைய ஜனங்களுக்கு இதுவரையிலும் செய்ததுபோல, கட்டாயப்படுத்தி போர்த்தொழில் பழக்கவும் கூடாது. ஜர்மானியர் ரயின்நதியிலிருந்து 30-மைல் தூரத்திற்குள் பாதுகாப்பிற்குரிய வலுத்த கோட்டைகள் முதலிய கட்டடங்களைக் கட்டக்கூடாது, ரயின் நதிக்கரையிலிருந்து அதே தூரத்திற்குள், ஜர்மானிய போர் வீரர்களை வைக்கவும் கூடாது. போர்க்கப்பல்கள் விஷயத்தில், சண்டைக்கப்பல்கள் 6, சிறு சண்டைக்கப்பல்கள் 6, அழிக்கும் கப்பல்களும் டார்பிடோ படகுகளும் சேர்ந்து 24-தான் அவர்கள் வைத்திருக்கலாம். சண்டைக்கு முன்னுல்கூட, ஆங்கிலேயர்களுக்கு 29-சண்டைக்கப்பல்களும், 100-க்கு அதிகமான சிறு சண்டைக் கப்பல்களும், 250-அழிக்கும் கப்பல்களுந்தானிருந்தது. இப்பொழுது அதிகமாயிருக்கிறது. ஜர்மானியர்கள், நீர்க்குள்ளோடும் கப்பல்களை வைத்திருக்கவாவது செய்யவாவது கூடாது. அவர்கள், சண்டைக்கு உபயோகப்படக்கூடிய ஆகாயக் கப்பல்களைச் செய்யவும் கூடாது. வைத்திருக்கவுங்கூடாது. ஜர்மானிய தேசத்துக் கரையோரத்திற்கும் அவர்களுடைய போர்க்கப்பல்களுக்கும் முக்கியமான காப்பாயிருந்த எலிகோலாண்ட் என்னும் தீவிலிருந்த அரண்களையெல்லாம் இப்பொழுது அழித்துப்போடவேண்டியது.

ஜாமீன்கள்:—ஜர்மானியர் உடன்படிக்கையில் கண்ட நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றுவதை நிச்சயப்படுத்தும்பொருட்டு, ரயின் நதிக்கு மேற்கிலுள்ள ஜர்மானிய தேசமுழுதும், 15-வருஷ காலங்களுக்குத் துணையரசர்களின் சேனைகள் வைக்கப்பட்டிருக்கும் ரயின் நதியின் பாலங்களெல்லாம் துணையரசர்கள் அதிகாரத்திற்குட்பட்டிருக்கும். இந்தத் தேசத்தில் வைக்கப்பட்டிருக்கும் துணையரசர்களின் சேனைகளுக்குண்டாகும் செலவு, ஜர்மானியர் கொடுக்கவேண்டும். ஜர்மானியர், உடன்படிக்கை நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றினுல், துணையரசர்களின் சேனைகளை அத்தேசத்திலிருந்து சீக்கிரமாக நீக்கிவிடுவார்கள். துணையரசர்கள் இஷ்டப்பட்டால், அவர்கள் ஜர்மானியதேசத்தில் தாராளமாய்ச் சென்று வியாபாரம்

செய்வதை ஜர்மானியார் இடையூறு செய்யாமற் தடுப்பதற்குவேண்டிய நிபந்தனைகளும் இருக்கின்றன.

தேச ஐக்கிய சங்கம் (League of Nations)—ஒரு தேச ஐக்கிய சங்கம் ஏற்படுத்தப்படும். உலகத்தில் சமாதானம் நிலைநிற்கும்படி பாதுகாப்பதே அச்சங்கத்தின் நோக்கம். அச்சங்கத்தின் அங்கத்தினர்கள், ஒருவர் மற்றொருவர் தேசங்களில் படையெடுத்துச் செல்லாதபடி தடுத்துக் காப்பாற்ற உடன்படுகிறார்கள். அவர்கள் ஒரு நியாயசபை ஏற்படுத்தி அந்த நியாயசபையார்முன், ஒரு தேசத்தாருக்கும் மற்றொரு தேசத்தாருக்குமுள்ள வழக்குகளை விசாரித்துச் சட்டநிபந்தனைகளின்படி தீர்மானம் செய்யப்படும். அவர்கள் தங்களுக்குள், ஒவ்வொருவரும் வைத்திருக்கவேண்டிய சேனைகள், போர்க்கப்பல்கள் முதலியவற்றின்தொகுதி இன்னதென்று ஏற்பாடு செய்துகொள்ளச் சம்மதிக்கிறார்கள். இதைச் செய்துமுடித்தால், ஒவ்வொரு தேசத்தாருக்கும் அதிகபணம் மீதப்படும். ஏனென்றால், ஒவ்வொரு தேசத்தாரும், அயல்தேசத்தாரைவிட அதிக பலமுள்ளவர்களாகவேண்டுமென்னும் எண்ணத்தோடு சேனைகளையும் போர்க்கப்பல்களையும் விர்த்தியாக்க இதற்குமுன் அதிகப்பணம் செலவிட்டு வந்தார்கள். முதலில், தேசஐக்கிய கூட்டுறவுச் சங்கத்தில், ஜர்மானிய தேசத்தார் ஒரு அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளப்படவில்லை; ஆனால், அவர்கள் சமாதான நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றினார்களானால், அவர்களையும் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளலாம் என்று உத்தேசித்திருக்கிறார்கள்.

மேற்சொல்லிய விஷயங்களினால், துணைபாசர்கள் ஜர்மானியரிடத்தில் போதுமான ஜாமீன் வாங்கியிருக்கிறார்களென்றும், ஜர்மானியர் சண்டைபைப்பற்றி நினைக்க அநேக வருஷங்கள் வரையில் அவர்களால் ஒன்றும் முடியாதென்றும் நன்றாய்த்தெரிகிறது. அவர்கள் சேனையில் ஒரு லட்சம் போர்வீரர்கள்தானிருக்கிறார்கள். ஆனால், ஆங்கில சேனையில்மட்டும், சண்டை முடிவதற்கு முன், பிரான்சு தேசத்தில் 20 லட்சம் போர்வீரர்களிருந்தார்கள். போர்க்

கப்பல்களில் அவர்களுக்கு 6 பெரிய சண்டைக்கப்பல்களும், 24 அழிக்கும் கப்பல்களுந்தானிருக்கின்றன. ஆங்கிலேயர்களுக்கோ, சண்டைக்கு முன்கூட, 29 பெரியசண்டைக்கப்பல்களும் 200-க்கு மேலேயே அழிக்கும் கப்பல்களும் இருந்தன. சண்டை ஆரம்பித்தது முதல் இப்பொழுது, ஆங்கிலேயர் கப்பல்களின் தொகை ஏராளமாய் விர்த்தியாகியிருக்கின்றது. மேலும், ஜர்மானியர் விட்டுக்கொடுத்த தேசத்தின் விஸ்தீர்ணம், சென்னை இராஜதானியின் மூன்று அல்லது நான்கு ஜில்லாக்களின் விஸ்தீர்ணத்திற்குச் சமமாகும். இதோடுகூட, அவர்களுக்கிருந்த குடியேற்ற நாடுகளையெல்லாம் அவர்களிழந்தார்கள். இத்தேசங்களில் அதிக செழிப்பான நிலமும், அநேகபெரிய பட்டணங்களுமிருக்கின்றன. ஜர்மானியர், சண்டைக்கு முன்னிருந்ததைவிட அதிக பலவீனமாகிவிட்டார்கள். இதுவுமன்றி, சண்டை காலத்தில் அவர்களுடைய போர்வீரர்களில் 16 லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள் இரண்டு வருஷகாலங்களுக்கதிகமாகவே அத்தேசத்து ஜனங்கள் பசியினால் வருந்தினார்கள். இவ்வாறு ஜர்மானியர் சண்டை நடக்கும் காலத்தில் தாங்கள் பட்ட கஷ்டங்களையெல்லாம் ஞாபகத்தில் வைத்திருப்பார்கள். மறுபடியும் அக்கஷ்டங்களை அனுபவிக்க இஷ்டப்படமாட்டார்கள்.

இன்னும், ஆஸ்திரியரோடும், பல்கேரியரோடும், துருக்கியரோடும் சமாதானம் முடியவில்லை. இதற்குக் காரணம், அத்தேசத்தார்கள். சமாதானம் செய்துகொள்ள இஷ்டப்படவில்லையென்பதாவது, துணையரசர்கள் கேட்பதைத் தடுப்பதற்குச்சக்தியுள்ளவர்களென்று நினைப்பதாவதல்ல. இத்தேசத்தார்கள் ஜர்மானியரைவிட அதிக பலக்குறைவானவர்கள். அவர்களோடு சமாதான நிபந்தனைகளை ஏற்பாடு செய்துகொள்ளுவது அதிக கஷ்டமாயிருக்கிறது. ஏனென்றால், முன்னால் இத்தேசத்தார்களுக்கு உட்பட்டிருந்த அநேக தேசத்தார்கள், இப்பொழுது சுயேச்சையான தேசத்தார்களாக ஒப்புக்கொள்ளப்படவேண்டுமென்று விரும்புகிறார்கள். பலதேசத்தார்களுக்குள்ள வழக்குகளை விசாரித்துத் தீர்மானம் செய்து அவர்களுடைய எல்லைத்தகராறை நியாயப்படி தீர்ப்பதற்கு துணையரசர்

களுக்கு அதிக கஷ்டமாயிருக்கிறது. இப்பொழுது ஜர்மானியரோடு சமாதானம் முடிந்துவிட்டது. இனி எல்லா வழக்குகளும் சீக்கிரம் தீர்ந்துபோகுமென்று நினைக்கிறோம்.

இப்பொழுது சண்டை முடிவாகிவிட்டது. ஆனால் சண்டையில் உண்டான சேதங்களை, இரண்டொரு நாளையில் சரிப்படுத்த முடியாது. சண்டை நடக்குங்காலத்தில், எல்லா மனிதர்களும், எல்லா தளவாடங்களும், எல்லா யந்திரங்களும், கொண்டுசண்டைக்கு அல்லது போர்முனைக்கு உபயோகமுள்ள ஆயுதம் முதலானவைகள்செய்வதில் வேலையாயிருந்தார்கள். சாதாரணமாய் மனிதர்களுக்கு வேண்டிய சாமான்களை உண்டாக்குவதில் வேலையாயிருந்தவர்கள் வெகு சிலரே. ஆகையினால், எல்லாச்சாமான்களும் அகப்படாமல், அவைகளின் விலையும் அதிகமாய்விட்டது. இப்பொழுது சண்டை முடிந்தது. மனிதர்களும், தளவாடங்களும், யந்திரங்களும், மறுபடியும் மனிதர்களுக்குச் சாதாரணமாய் வேண்டிய சாமான்களையுண்டாக்குவதில் முயற்சியாயிருப்பார்கள். எல்லாச் சாமான்களின் விலையும், கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைய ஆரம்பிக்கும். ஆனால், சண்டையில் உண்டான நஷ்டத்தைச் சரிப்படுத்திக்கொள்ளவேண்டுமென்பதை ஞாபகத்தில் வைக்கவேண்டும். பெரும்பாகமான தேசங்களில். பட்டணங்கள் முழுதும் நாசமாக்கப்பட்டன; எல்லா வீடுகளும் இடிக்கப்பட்டன; தொழிற்சாலைகளிலுள்ள யந்திரங்களெல்லாம் உடைக்கப்பட்டன; சுரங்கங்களெல்லாம் அழிக்கப்பட்டன. ஐரோப்பாவின் மற்றப்பாகங்களில் ஆகாரத்தானியங்கள் செலவாகிவிட்டன; ஆடுமாடுகள் கொல்லப்பட்டன; ஜனங்களெல்லாம் பசியால் வருந்துகிறார்கள். ஐரோப்பாவில் உண்டான நஷ்டங்களெல்லாம் சரிப்படுத்தப்பட்ட பிறகுதான், துணி, இரும்பு முதலியவற்றின் விலைகளும், ஐரோப்பாவிலிருந்து நமக்குக் கிடைக்கும் சாமான்களின் விலைகளும் அதிசீக்கிரமாய்க்குறையும். இப்பொழுது சமாதானம் உண்டாயிருக்கிறபடியால், விலைகள் குறைய ஆரம்பிக்கும் என்று நாம் நம்பலாம்.